பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 18 வெள்ளிக்கிழமை 02.03.2018 கதிர் 117

காலைக்கதிர்
Kalaikkathir

விளம்பர சேகரிப்பாளர் பணிக்கு ஆள்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
021 222 2600, 077 311 9298, 075 313 2876

# வழிக்கு வருகின்றனர் தமிழ்த் தலைவர்கள்!

## முதல்வர் விக்கி புளகாங்கிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 02

"தமிழ்த் தலைமைகளின் தற்போதைய கருத்துகள் முற்றிலும் மாறி வருகின்றன. எம்மைத் தீவிரப் போக்குடையவர்கள் என்று குறை கண்டுபிடித்தவர்கள் இப்போது தாமும் அதே கொள்கைகளையும், கருத்துக்களையும் வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றனர். வடக்கு - கிழக்கு இணைப்பு வேண்டும் என்கிறார்கள். சுயாட்சி வேண்டும் என்கிறார்கள். தேசியம் பேசுகிறார்கள். சமஷ்டி வேண்டும் என்கிறார்கள். வீம்பில் பேசிய சிலர் தொடர்ந்து நாம் கூறிவந்த கருத்துக்களை இப்போது தாம் விடாப்பிடியாகப் பற்றி நிற்கின்றார்கள்."

- இவ்வாறு பட்டவர்த்தனமாகப் புளகாங்கிதத்துடன் கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன்.

பக்கம் 18 »

## வடக்கு - கிழக்கில் இளைஞர் அணிகள்

### தமிழ் மக்கள் பேரவை திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 02

தற்போது எமது இளைஞர் அணிகளை உருவாக்கத் தக்க தருணம் வந்துள்ளது. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இளைஞர் அணிகளை ஒன்று சேர்க்கவும் அவர்களுக்கு தமிழ் மக்கள்

பக்கம் 18 »

## மனம் தளராது போராடுங்கள்

### கேப்பாபிலவில் போராடும் மக்களிடம் சம்பந்தன்



முல்லைத்தீவு, மார்ச் 02

கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி ஆரம்பித்த போராட்டம் நேற்

பக்கம் 18 »

## தமிழ் மக்கள் பேரவையும் ஜெனீவாவுக்கு செல்கிறது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 02

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில், தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்களும் இதில் பங்கேற்பதற்காக ஜெனீவா செல்லவுள்ளனர் என வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில்

பக்கம் 18 »

## அனந்தி, ஐங்கரநேசன், அருந்தவபாலன் தமிழ் மக்கள் பேரவை மத்திய குழுவில்!







வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் முன்னாள் அதிபரும் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளருமான க.அருந்தவபாலன்

பக்கம் 18 »

## இனி இது ரகசியம் அல்ல!

இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனின் சேவை நயப்பு விழா தொடர்பில், விசாரித்து என்னை நோண்டி நுங்கெடுத்த என் நண்பர் நேற்று மாலை திரும்பவும் தொலைபேசி அழைப்பில் வந்தார்.

பக்கம் 03 »

### காணாமற்போனோர் பணியகம்;

## முக்கியமானதொரு நகர்வு அமெ. தூதுவர் வரவேற்பு



கொழும்பு, மார்ச் 02

காணாமற்போனோர் பணியகத்துக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது, முக்கியமானதொரு நகர்வு என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

பக்கம் 18 »

## நல்லாட்சி மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழப்பு

### ஜெனீவாவில் கனடா சுட்டிக்காட்டு

ஜெனீவா, மார்ச் 02

நல்லாட்சி அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் எனக் கனேடிய வெளியுறவு அமைச்சர் கிறிஸ்ரியா பிறிலண் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் சபையின் 37

பக்கம் 18 »

## தமிழர் மீதான அரச படைகளின் சித்திரவதைகள் தொடர்கதையே!

### புதிய ஆதாரங்களை வெளியிட்டது அல் ஜஸீரா



கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் தமிழர்கள் மீதான சித்திரவதைகளைப் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுக்கின்றனர்

பக்கம் 18 »

## சைவ ஆலயங்கள் உடைப்பை தடுக்கக் கோரிக் கவனயீர்ப்பு!

### ஞாயிற்றுக்கிழமை நல்லூரில்

யாழ்ப்பாணம், மார்ச் 02

வடபகுதியில் சைவ ஆலயங்கள் உடைத்துச் சேதமாக்கப்படும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தக் கோரி அகில இலங்கை சைவ மகா

பக்கம் 18 »



சொந்த நிலங்களை மீட்பதற்காகக் கேப்பாபிலவு மக்கள் ஆரம்பித்த நிலமீட்புப் போராட்டம் நேற்று ஒருவருடத்தை எட்டியது. விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதெனவும், தீர்வு கிடைக்ககாவிட்டால் வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுக்கவும் அந்த மக்கள் தீர்மானித்துள்ளனர்.

(விரிவு 2ஆம் பக்கத்தில்)

## சிரிய இனப் படுகொலைகளை உடன் தடுத்து நிறுத்து ஐ.நாவே!

### யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 02

சிரியப் போரில் பொது மக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும் போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியும் யாழ்.மத்திய பஸ் நிலையம்

பக்கம் 18 »

காலைக்கதிர் Kalaikkathir



### கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதியுடன் சந்திக்க நடவடிக்கை;

# தீர்வு இல்லையேல் மாபெரும் வெகுஜன போராட்டத்துக்கு முடிவு!





ஒருவருட பூர்த்தியில் அரைமணிநேர தியானம் மற்றும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, மார்ச் 02

கேப்பாபிலவு பூர்விக கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் நேற்று ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து தொடர்கிறது.

இந்த நிலையில், தமது காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாட நேற்று முற்பகல்10 மணிக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மாகாண சபை உறுப்பினர்களையும் தமது போராட்ட இடத்துக்கு வருகைதருமாறு மக்கள் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்தநிலையில், இவர்களது அழைப்பை ஏற்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் , ஆண்டியையா புவனேஸ்வரன் மற்றும் புதிதாக பிரதேச சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சி.லோகேஸ்வரன், க.விஜிந்தன், க.தவராசா, இ.ரவீந்திரன் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவர்களிடம் மக்கள் தமது போராட்டம் ஒருவருடம் கடந்த நிலையில், எமது போராட்டத்துக்காக அடுத்த கட்டம் தங்களது நடவடிக்கை தொடர்பில் வினவினர்.

இதன்போது வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா இந்த விடயம் தொடர்பில் மக்களையும் அழைத்து ஜனாதிபதியை சந்திக்க எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும், தற்போது தென்பகுதியில் நிலவும் அரசியல் குழப்பநிலை காரணமாக அதில் தாமதம் ஏற்பட்டுள்ளதெனவும் விரைவில் அந்த சந்திப்பை ஏற்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு சாதகமான தீர்வுகளை கொண்டுவராவிடில் மாபெரும் வெகுஜன போராட்டம் ஒன்றை நடத்தவும் மக்கள் பிரதிநிதிகள் உடன்பட்டுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மக்கள் தாம் போராட்டம் மேற்கொண்டுவரும் முல்லைத்தீவு பாதுகாப்பு படை கட்டளை தலைமையக வாயிலில் அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தில் அரைமணி நேரம் தியானம் மேற்கொண்டமையுடன், போராட்ட கூடாரம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் மேற்கொண்டனர்.

கேப்பாபிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் பலகட்டமாக காணிகளை விடுவித்த அரசு இறுதியாக 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் மார்கழி 28 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத் தரப்பில் இருந்து மாவட்ட அரசஅதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது .

இதன்போது கேப்பாபிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியிலுமான 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கை யளிக்கப்பட்டிருந்தன.

இந்தக் காணிகளுக்குள் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி மக்கள் சென்றனர்.

இந்த நிலையில், இன்னும் தமது காணிகளில் விடுவிக்க வேண்டியுள்ள 104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து தொடரும் மக்கள் போராட்டம் நேற்று ஒரு வருடத்தை நிறைவு செய்து இரண்டாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-81)

## சிரிய படுகொலைகளை கண்டித்து கிளிநொச்சியில் கண்டன கவனவீர்ப்பு!




கிளிநொச்சி, மார்ச் 02

சிரியாவில் இடம்பெற்று வருகின்ற படுகொலைகளை கண்டித்து கிளிநொச்சியிலும் நேற்று கண்டன கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இளைஞர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இணைந்து சிரிய படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சிரியாவில் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிராக தங்களின் எதிர்ப்பை இவர்கள் வெளிப்படுத்தினர்.

'ஐ.நாவே உனது கள்ள மௌனத்தை கலை', 'ஈழத்திலிருந்து சிரியாவுக்கு குரல்', 'பொது மக்கள் கொல்லப்படுவதைநிறுத்து', 'சிரியாவின் குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்கு', '2009 முள்ளிவாய்க்கால்', '2018 இல் சிரியா' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் கண்டன கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

## அரசின் அராஜகம் இன்னும் தீரவில்லை; அடக்குமுறைகள் தொடருகின்றன!

### வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



அரசின் அராஜகம் இன்னும் தீரவில்லை. அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்

கேப்பாபிலவு மக்களது நில மீட்பு போராட்டம் நேற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் நேற்று மக்களின் போராட்ட இடத்துக்குச்சென்று கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கேப்பாபிலவு மக்களின் அகிம்சை போராட்டம் ஆண்டு ஒன்றைக் கடந்துள்ள நிலையில், அரசின் அராஜகம் ஆனது இன்னும்தீரவில்லை. அடக்குமுறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பது இங்குள்ள வெகுஜன போராட்டங்களை மக்கள் தொடர்ந்து நடத்துவதில் இருந்து அறியமுடிகின்றது.

அராஜகப் போக்கை அரசு கைவிட்டுவிட்டு கேப்பாபிலவு மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்த இடத்தில் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனவோ அவற்றையும் விடுவித்து மக்களுக்கான நியாயமான தீர்வுகள் கிடைக்க வேண்டும்என்பதைகேட்டுநிக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (81)

## துரித நிவாரணங்கள் அடங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை

கொழும்பு, மார்ச் 02

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக குழு நியமிக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய துரித நிவாரணங்களை பட்டியலிடுவது குழுவின் நோக்கமாகும். சகல தரப்புக்களிடமும் பெறப்பட்ட யோசனைகளை கருத்திற்கொண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் கட்சியை மறுசீரமைப் பதற்கான யோசனைகளும் உள்ளடங்குகின்றன.

கட்சி மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம் பிரதமரிடம் கையளிக்கப்படும். அந்தக் குழு அமைச்சர் ருவன் விஜயவர்தன தலைமையில் இயங்குகிறது.



தேசிய அரசால் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின் வரிசை உறுப்பினர்கள் சேவைகளை வழங்குவதில் எதிர்கொள்ளும் முட்டுக்கட்டைகளை பட்டியலிடக் கூடிய அறிக்கை ஒன்றும் வரையப்பட்டுள்ளது.

# மக்களின் போராட்டங்களை முடக்கத் தீவிர நடவடிக்கை!

முல்லைத்தீவு, மார்ச் 02

முல்லைத்தீவில் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முடக்கப் பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சிக் காலங்களில் கடத்தல், கொலைகள் என அச்சுறுத்தப்பட்ட மக்கள் இப்போது நல்லாட்சி அரசினால் பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களால் தந்திரமாக அச்சுறுத்தப்படுகின்றனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

நேரடியாக இராணுவம் மற்றும் வெள்ளை வான் கடத்தல்கள் இல்லையே தவிர, அச்சுறுத்தல் இப்போது புதுவடிவம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஐ.நா. கூட்டத்தொடர் ஆரம்பித்த நிலையில், போராட்டங்களை முடக்கப் பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். கேப்பாபிலவு மக்களது காணி விடுவிப்புப் போராட்டத்தை முடக்க



பொலிஸார் இரண்டு தடவைகள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். ஆயினும், அமைதியாகப் போராட்டத்தில் ஈடுபட நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற வட்டுவாகல் காணி அளவீட்டு எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். அதன் பின்னர் 26ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது நடைபெற்ற மக்கள் போராட்டங்களை முடக்க வீதித் தடைகள் போடப்பட்டதுடன் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

நேற்று இடம்பெற்ற கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்பின் ஓராண்டு நிறைவுப் போராட்டத்திலும் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி இருந்தனர்.

இவ்வாறு மக்கள் போராட்டங்களை முடக்கப் பொலிஸார் செயற்படுவது போன்று புலனாய்வாளர்களும் போராட்ட இடங்களுக்கு அண்மையில் முழு நாளாகத் தரித்து நிற்கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# ரணிலுக்கு எதிராக ஐ.தே.க.வின் பிரபலங்கள் பலர் கையொப்பம்!

## கூறுகின்றார் மஹிந்தானந்த

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள எதிர்பாராத சில பிரபலங்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் எனக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குத் தற்போதும் ஐ.தே.கவின் எதிர்பார்க்க முடியாத பலர் ஆதரவுவழங்கிக் கையொப்பமிட்ட வண்ணமுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புள்ளதாகத் தெரிவிக்கப்படும் அர்ஜுன் அலோசியஸை நாட்டுக்கு அழைத்து வராமல் இருக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் பிரதமர் தலைமையிலான குழு முன்னெடுத்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பிரதமர் பதவி இருக்கும் வரையில்தான் அர்ஜுன் அலோசியஸ் வருவதைத் தடுக்க முடியும். பிரதமர் பதவி பறிபோனால் அர்ஜுன் அலோசியஸை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு அர்ஜுன் அலோசியஸ் வந்தால், பிணை முறி தொடர்பான உண்மைகள் வெளிவரும். இதனைத் தடுக்கவே ஐக்கியதேசியக் கட்சி செயற்படுகின்றது எனவும் மஹிந்தானந்த குறிப்பிட்டார். (ஐ)

# வட மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முழுநிலா கலைவிழா



வட மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நேற்று முழுநிலா கலைவிழா இடம்பெற்றது.

வட மாகாணக் கல்வி அமைச்சினால் வட மாகாணத்தில் உள்ள கல்விவலயங்கள் ரீதியாக இடம்பெறுவரும் முழுநிலா கலைவிழாவின் மாசி மாதத்திற்கான நிகழ்வே நேற்றுப் புதுக்குளம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயங்களின், கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஸ்ணனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வட மாகாணக் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்திருந்தார்.

வவுனியா வடக்குக் கல்வி வலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் விழாவை அலங்கரித்திருந்ததுடன், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற மாணவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்களும் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், ஆர். இந்திரராசா, வட மாகாண கல்விப்பணிப்பாளர், ஏனைய வலய கல்விப்பணிப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (ஐ)

# கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்களை துப்பாக்கி காட்டி மிரட்டிய பெண்!



சிரியாவில் இடம்பெறும் இனப்படுகொலையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் பெண்ணொருவர் செயற்பட்டமை அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வந்த நடுத்தர வயதுடைய பெண்ணொருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கைகளில் ஏந்தியிருந்த பதாகைகளில் எழுதியுள்ள வாசகங்களைப் பார்த்து அது தொடர்பில் கேள்வியெழுப்பினார். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கடுமையாகப் பேசியதுடன், விளையாட்டுத் துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார்.

இந்தப் பெண்ணின் செயலைப் பார்த்து பொலிஸார் மௌனமாக இருந்தனர் எனவும், அந்தப் பெண் ஆர்ப்பாட்டம் முடிவடையும் வரை இவ்வாறே செயற்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தலையிடி, ரெலிபோன் லைனுக்குள்ளாக வருகின்றது என நினைத்தபடி *"ஹலோ"* என்றேன்.

*"என்ன காணும் நீர், இல்ல எண்டாலும் உம்மை விட நான் பெரிய பத்திரிகைக்காரன் எண்டதை ஒப்புக் கொள்கின்றீரோ...?"* – என்று பீடிகை போட்டார். எனக்கு விளங்கவில்லை.

*"அப்படி என்ன வெட்டிக்கிழித்து விட்டீர்?"* – என்று எரிச்சலுடன் கேட்டேன்.

*"இன்று நடந்த பேரவைக் கூட்டத்துக்குப் போனீரோ? அங்கை முதலமைச்சர் பேசினதைக் கேட்டீரோ?"* – என்றார்.

*"நீரும் உம்முடைய பத்திரிகைத்திறமையும்"*– என்று நொந்து கொண்டார்.

*"முதலிலை முதலமைச்சரின்ரை பேச்சை உமது நிப்போட்டர் எழுதித் தந்திருப்பார். அதைப் படித்துப்பாரும். கொஞ்ச நேரம் கழித்துக் கோல் எடுக்கிறன்."* – என்றார். அரைமணித்தியாலத்தில திரும்பவும் அழைப்பில் வந்தார்.

*"நான் சொன்னன். பார்த்தீரோ...? நீர் இல்லை என்னீர்...! இப்ப பாரும்... இந்தியாவோடை முதல்வர் ஒரு லைன் பிடிச்சு ஓடத் தயாராகி விட்டார் பாரும். உதைத்தான் 'A lot of water has passed under the bridge' எண்டு நான் அண்டைக்குச் சொன்னனான். நீர் உமக்கு விளங்கேல்லை எண்டு சளாப்பிப் போட்டீர். இப்ப பாரும் முதல்வர் என்ன பேசியிருக்கிறார்...? உம்முடை பேச்சுத் தமிழிலை சொல்லுறது எண்டால் இந்தியாவுக்கு முதுகு சொறியிற வேலையை முதல்வரும் ஆரம்பித்துவிட்டார். 'இந்தியாவுடன் கிட்டிய உறவைப் பேணுவதை சில கட்சிகள் விரும்புகிறார்கள் இல்லை.' எண்டு அவர் சொல்லுறது குமாரின்ரை பொடி கஜேந்திரகுமாரை. அதையும் சமாளிக்கத்தான் முதலமைச்சர் கதை விடுறார். 'தமிழ் மக்களுக்குப் போரின் கடைசி நாள்களில் நடந்தவற்றுக்கு இந்தியாவும் பொறுப்பு என்ற முறையில் ஓர் எண்ணம் அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் அன்றைய நிலைவேறு, இன்றைய நிலை வேறு' எண்டு அவர் சொல்லுறதன் அர்த்தம் என்ன? 'இந்தியாவின் அனுசரணை இல்லாமல் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நியாயமான குறிக்கோளை அடையமுடியாது என்ற எண்ணம் கொண்டவர்களும் எம்முள் இருக்கின்றார்கள்.' – எண்டு சொல்லுறதன் மூலம் இந்தியாவுக்கு தங்களிலை வேறு யாரோ முதுகு சொறிஞ்சு விடுற மாதிரி அவர் ஒரு 'அக்டிங்' குடுக்கிறார். மற்றப்படி இப்ப போற போக்கைப் பார்த்தால் முதல்வரின்ரை லேட்டஸ்ட் நடவடிக்கை சீனிலை கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு, இயக்கம் எல்லாமே அடுத்த நாட்டுக்காரரின்ரை ஆசியோடதான் நடக்குது போலை... நீர் உதொண்டும் அறியாமல், நான் ஒரு சீனியர் ஜேர்னலிஸ்ட் எண்டு கழுத்திலை போட்டை மாட்டிக் கொண்டு இருந்து எழுதித்தள்ளும்."* – என்று பொரிந்தார் அவர்.

பதிலுக்கு நான் அவருக்கு ஒரு குட்டி லெக்ஸர் அடிக்க வேண்டியதாயிற்று.

"இலங்கை விடயத்திலை ஐ.பி.கே.எவ். இலங்கைக்கு வர முன்பிருந்தே, திம்புப் பேச்சுக் காலம் தொட்டே நான் உந்தச் செய்திகளைக் கையாண்டு வாறனான். உங்களுக்கு இந்திய செட் – அப், அணுகுமுறை விளங்காது. அது ஒரு தரப்பு இல்லை. அங்கிலை பல தரப்புகள் உண்டு. 'றோ', ஐ.பி., வெளியுறவு அமைச்சு (சவுத் புளொக்), இராணுவப் புலனாய்வுப் பிரிவு எண்டு பல தரப்புகள் விடயங்களைக் கையாளும். ஒண்டுக்கு ஒண்டு குறுக்காலையும் ஓடும். இந்தியப் படை இங்கை இருந்த காலத்திலை காட்டுக்குள் இருக்கின்ற பிரபாகரனுடன் சமரசம் பேசுவதற்காக சென்னையில் அடையாறு புலிகளின் அலுவலகத்தில் இருந்த ஜொனி என்ற போராளியை ஹெலியிலை வவுனியாவுக்குக் கூட்டிவந்து காட்டுக்குள்ள பிரபாவிடம் இந்தியத் தரப்பில் ஒரு பிரிவு அனுப்பி வைச்சுது. காட்டுக்குள்ளே தலைவரோட பேசிவிட்டு ஆவணங்களுடன் திரும்பிக் கொண்டிருந்த ஜொனியை, அவரை அனுப்பின பிரிவுக்கு மாற்றான மற்றொரு இந்தியப் பிரிவு காட்டுக்குள் வழி மடக்கிச் சுட்டு, ஆவணங்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஜொனியைக் காட்டுக்குள் முடித்து விட்டார்கள் எண்ட செய்தியை 'ஜூனியர் விகடன்' மூலம் 'பிரேக்' பண்ணி வெளிப்படுத்திய அனுபவம் எனக்கு உண்டு. இந்த ஜொனியின்ரை பெயரிலைதான் பின் நாள்களில் 'ஜொனி மிதிவெடி'யை புலிகள் அறிமுகப்படுத்தினார்கள். அப்படி குறுக்காலை – எதிரெதிர் திசையிலை – செயற்படக் கூடிய பல பிரிவுகள் அங்கு உண்டு. ஒன்று விக்கியரைக் கையாளும். இன்னொன்று சம்பந்தன், சுமந்திரனை ஏத்தி விடும். மற்றொன்று கொழும்போடை கைகோக்கும். ஒரே சமயத்திலை பல கோணங்களிலை கட்டவிழும் குழப்பமான அரசியல் பாரும் இந்த சர்வதேசக் கையாள்கை. கேட்டதை, கிடைத்ததை செய்தியாக்கி எழுதிப் போட்டு இருக்கிறது தான் சரி. உந்த அனுமானிப்புக் கதைகளை செய்தியாக்கிப் பேரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது பாரும். உதை அரசடியிலை கதைக்கலாம். ஆனால் பத்திரிகையிலை எழுதமுடியாது." – என்று நான் விளக்கினேன்.

அவர் அதை ஏற்கவில்லை. இந்தியஏணியில் ஏறி, சம்பந்தருக்கும் மேலாகப் போய் விடுவார் முதல்வர் விக்கி என்ற நம்பிக்கை என் நண்பருக்கு. அதை ஏன் மறுக்கப் போவான் என்று நினைத்து என் வாதத்தை முடித்துப் பிறகு பேசுவோம் என்று தொலைபேசியைக் 'கட்' பண்ணினேன் நான்.

- மின்னல் -

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காய் நகர்த்தும் முதல்வர் விக்கி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தாம் தொடர்ந்தும் சவாலாகவே இருக்கப் போகின்றார் என்பதை வெளிப்படையாயும் தெளிவாகவும் உணர்த்தியிருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி – தன்னுடைய 'அரசியல் திமிர்த்தனத்தால்' வெளியே தள்ளிய அரசியல் வளவாளர்களை அவர் தம்முடன் அரவணைத்துக் கொண்டிருக்கின்றார்.

விசேடமாக அருந்தவபாலன், அனந்தி சசிதரன், பேராசிரியர் சிற்றம்பலம் மற்றும் பொ.ஐங்கரநேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கட்சி அரசியலிலும் தேர்தல் அரசியலிலும் நன்கு தேர்ச்சியும் செல்வாக்கும் பெற்ற இவர்கள் முதல்வர் விக்னேஸ்வரனின் அணியில் இணைவது அவருக்கு மிகப் பெரிய பலமே.

இப்போது பேரவையைச் செயற்படுத்துவதற்காக பதினொரு பேர் கொண்ட செயற்குழு ஒன்றையும் நியமித்திருக்கின்றார்.

பேரவையுடன் தொடர்புபடும் ஏனைய கட்சிகளில் அதிக ஈடுபாடு கொண்டிருப்போரைத் தவிர்த்து, இந்த செயற்குழுவை அவர் நியமித்திருக்கின்றமை தெளிவான செய்தியை நமக்கு எடுத்துரைக்கின்றது.

பேரவை ஓர் அரசியல் கட்சி அல்ல. அது ஒரு மக்கள் இயக்கமே என்று முதல்வர் திரும்பத் திரும்பக் கூறினாலும், மாற்றுக் கட்சி ஒன்றுக்கான தயார்ப்படுத்தலை நோக்கி அவர் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் நகர்கின்றார் என்பது இவற்றின் உட்கிடையாகப் பளிச்சிடுகின்றமையை மறுக்கமுடியாது.

தமக்கென ஓர் அரசியல் கட்டமைப்புக்கான அடித்தளத்தை – அத்திபாரத்தை – அவர் செதுக்கத் தொடங்கி விட்டார் என்பது தெளிவு.

அவரது நேற்றைய உரையில் இத் தொடக்கத்தை ஒட்டி அவர் கூறியிருக்கும் இரண்டு பிரதான கருத்துக்கள் நோக்கத்தக்கவை.

ஒன்று – தமிழ்க் கூட்டமைப்பு தன்னுடைய விட்டேத்தியான போக்கினாலும் எதேச்சதிகாரமான ஏற்பாடுகளினாலும் புறம் ஒதுக்கி வரும் இளைஞர்களை வளைத்துப் போடும் அவரது எத்தனம்.

இளைஞர்களைக் குறி வைத்திருக்கும் முதல்வர், தம்மை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவியிழக்கச் செய்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் போது தம்மைச் சூழத் திரண்ட இளைஞர்கள் பற்றிப் பேசுகின்றார். அச்சமயம், சில நூற்றுக் கணக்கில் அல்லது சில ஆயிரக் கணக்கில் முதல்வருக்கு அருகில் இளைஞர்கள் கூடினர் என்பது வாஸ்தவம்தான். ஆனால், ஒட்டுமொத்த தமிழ் இளைஞர் சமுதாயத்தின் வெளிக்கிளம்பலாகவோ, பெரும் எழுச்சியாகவோ கொள்ளத் தக்க எண்ணிக்கை அல்ல அது. அடுத்தது – அவருக்காக அங்கு திரண்ட அந்த இளைஞர் கூட்டத்தில் கணிசமானோர் ஏற்கனவே இன்றைய நிலையில் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கும் – அவர் போன்ற ஓரிரு பிற தலைவர்களுக்கும் பின்னால் அணி சேர்ந்திருப்பவர்கள்தான். அவர்களைத் தனித்துவமாகத் தனக்குப் பின்னால் அணி திரள்பவர்களாக முதல்வர் கணக்கீடு செய்வது எவ்வளவு தூரம் சரியாகும் என்பது தெரியவில்லை.

அடுத்த விடயம்– இந்தியா தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் காட்டும் அனுசரிப்புப் போக்கு.

முதல்வர் விக்னேஸ்வரன் இந்தியத் தரப்புடன் இணங்கி அனுசரித்துப் போகும் பண்பியல்பை அண்மைக்காலமாக தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றார் என்பது பல செய்திகள் ஊடாக கோடி காட்டப்பட்டு வந்ததே. அதை இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார் முதல்வர். அவ்வளவே.

இந்தியாவுடனான இணக்கப் போக்கை முதல்வர் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றமையும் புதிய சூழலில் இந்தியாவை அனுசரித்துப் போவது தவிர்க்க முடியாதது என்ற சாரப்பட சில நியாயப்படுத்தல்களை வேறு சிலரின் கருத்துக்களாக அவர் முன் வைக்க முனைகின்றமையும் கூட சில உண்மைகளை – யதார்த்தங்களை – உணர்த்தாமல் இல்லை.

ஓர் அரசியல் சக்தியைத் தமிழர் தாயகத்தில் கட்டியெழுப்புவதற்குத் தாம் முகம் கொடுக்கக் கூடிய யதார்த்தப் புறச் சூழல்களையும் நெருக்கடிகளையும் புரிந்து கொண்டே, அவர் காய்களை நகர்த்துகின்றார் என்பது இந்தியா தொடர்பான அவரது தற்போதைய பகிரங்க நிலைப்பாட்டு அறிவிப்பின் மூலம் வெளிப்படுகின்றது.

ஆகவே, அரசியல் தெளிவோடு சில அடிகளை அவர் முன்னெடுத்திருக்கின்றார் எனக் கொள்ளலாம். இவற்றைச் செய்து முடிப்பதற்கு அவருக்கு முன்னால் இருக்கும் காலமோ மிகக் குறுகியது. வேலைகளோ பாரியவை. அவற்றை அவர் அக்கால கட்டத்தில் வெற்றிகரமாக நகர்த்தி முடிப்பாரா என்பது நம்பிக்கை தருவதாக இன்னும் அமையவில்லை என்றே நாம் கருதுகின்றோம்.

அடுத்த விவகாரம் அரசியல் காய் நகர்த்தல்களில் அண்மைக் காலத்தில் கூட்டமைப்பு இழைத்த அதே தவறை அவரும் இழைக்காமல் இருக்க வேண்டும் என்பது.

அது, ஜனநாயகத்தின் நான்காவது தூணாகிய – 'காவல் நாய்' ஆகிய – ஊடகங்களைக் கையாளுதல்.

அது, எவ்வளவு முக்கியம் என்பதை இந்தத் தேர்தல் பின்னடைவின் பின்னர்தான் கூட்டமைப்பு உணர்ந்திருக்கும் என்று நினைக்கிறோம்.

எல்லா ஊடகங்களிலும் இருந்தும் சம தூரத்தில் – 'நெருப்பில் குளிர்காய்பவன் போல' நெருங்கியும் நெருங்காமலும் – விடயங்களைக் கையாள்வது ஓர் அரசியல் தலைவனுக்கு முக்கியமானது. வெறுமனே சமூக ஊடகங்களை மட்டும் நம்பி அரசியல் இலக்குகளை எட்டிவிடமுடியாது. அதனையும் முதல்வர் கவனிப்பது நல்லது.

---

### பிரித்தானியத் தமிழர்களின் தொடர் அழுத்தங்களால்

# பிரித்தானிய நாடாளுமன்றில் இலங்கை மீது கடும் அதிருப்தி

லண்டன், மார்ச் 02



பிரித்தானியா இலங்கைக்கான ஆயுத விற்பனையை உடனடியாக நிறுத்தக்கோரி புலம்பெயர் தமிழர்கள் எடுத்து வரும் கடும் முயற்சிகளைத் தொடர்ந்து பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஆயுத விற்பனையை நிறுத்துவதற்குச் சார்பாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து இது தொடர்பான கேள்விகளையும் நாடாளுமன்றில் எழுப்பி வருகின்றார்கள்.

அந்த வகையில் கடந்த சனிக்கிழமை கிரீன்விச் மற்றும் வூல்விச் நாடாளுமன்ற உறுப்பினர் மத்தியூ பெனிகுக் அவர்களைப் புலம்பெயர் தமிழரான சிவராஜா சிவசுதன் தலைமையில் பத்மலோஜினி குகேந்திரன், செல்வராசா சபேசன், மயூரன் சதானந்தன், வரதராஜா மோகனரூபன் மற்றும் தமிழர் தகவல் நடுவத்தின் பிரித்தானியாவின் இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்துதல் தொடர்பான பிரதான ஏற்பாட்டாளர் அந்தன் தியாகராஜா ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கைக்கான ஆயுத விற்பனை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் நடத்தவும், ஆயுத விற்பனையால் ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றமையை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு வலியுறுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மத்தியூ பெனிகுக்–

உங்கள் கோரிக்கை பற்றி ஏற்கனவே நான் அறிந்திருக்கிறேன். லியூவிஷ்சம் டெப்ற்போட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் விக்கிபொக்ஸ்குரவ்ற் உட்படபிறநாடாளுமன்றஉறுப்பினர்களுடன் இணைந்து இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புகிறோம்.

ஆயுத விற்பனை தொடர்பில் வர்த்தக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் இலங்கைக்கானஆயுத விற்பனையை நிறுத்தக்கோரி நடத்தப் படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர் சந்திப்புக்கள் யாவும் தமிழர் தகவல் நடுவத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு)

---

# சிங்கப்பூர் சென்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, மார்ச் 02

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சிங்கப்பூருக்குச் சென்றார்.

இலங்கையில் முதலீடு செய்வது குறித்த மாநாட்டில் பங்கேற்கவே பிரதமர் சிங்கப்பூர் சென்றுள்ளார். இந்த மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

இதில் பிராந்தியத்தின் முக்கியமான முதலீட்டாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கு முன்னதாக, சிறிலங்கா முதலீடு என்ற பெயரிலான மாநாடுகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரித்தானியா, சுவிற்சர்லாந்து, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் இடம் பெற்றிருந்தன.

---

# அம்பாறை இனக்கலவரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவேண்டும்!

கொழும்பு, மார்ச் 02

அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிரான இனக்கலவரம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அம்பாறை இனக்கலவரம் தொடர்பாக கடுமையான முறையில் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் நல்லாட்சி மீதான சிறுபான்மையினரின் நம்பிக்கையைத் தகர்த்துவிடும் என்று அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

அம்பாறை இனக்கலவரத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பெரும்பான்மையினத்தவர் குற்றம் சாட்டுவது போன்று உணவில் ஏதேனும் நச்சுப் பொருள் கலக்கப்பட்டிருந்தால் அது



குறித்து சுகாதாரத்துறை உதவியுடன் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமே தவிர, வன்முறை அணுகுமுறைகளை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# உனா மெக்கோலியின் மறைவு; பிரதமர் ரணில் அனுதாபக் குறிப்பு



ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிட ஒருங்கிணைப்பாளரும் அபிவிருத்தி செயல்திட்டத்திற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியான உனா மெக்கோலியின் மறைவையிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுதாபக்குறிப்பை பதிவுசெய்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்திற்கு விஜயம் செய்த பிரதமர் அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் பதிவுப் புத்தகத்தில் தமது அனுதாபத்தை பதிவு செய்தார்.

இதன்போது பிரதமருடன் அமைச்சர் சாகல ரத்னாயக்கவும் கலந்து கொண்டார்.

---

## நாளை

03.03.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் மு.இ. 10.53 வரை
திதி : துதியை பி.இ.4.34 வரை
சுபநேரம் : 3.27 – 4.57 வரை
இராகுகாலம் : 9.27 – 10.57 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கையில் மனித உரிமை மீறல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பகின்றமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்று ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் மேரி கத்தரின் பீ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், ஈரான் போன்ற மனித உரிமைகளை மீறும் நாடுகளை ஒரு விதமாகவும், இஸ்ரேல் விடயத்தில் பாரபட்சமாகவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை நடந்து கொள்கிறது என்று குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏனைய உறுப்பு நாடுகளில் இருந்து இஸ்ரேலை வேறுபட்ட முறையில் கையாளுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இலங்கை, வடகொரியா, ஈரான், மியன்மார், தென் சூடான், சிரியா போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவை பணியாற்ற வேண்டும்.

இலங்கை விடயம் போன்று, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் வலுவான தீர்மானங்களை நிறைவேற்ற ஒன்றாக முன்வரும் என்று அமெரிக்கா நம்புகிறது.

இலங்கை விடயத்தில் அவ்வாறு ஒன்றுபட்டிருந்ததால், முன்னேற்றங்களைச் செய்வதற்கு இலங்கை அரசு உறுதியளித்தது என்றும் அவர் கூறியுள்ளார்.



ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

## இலங்கை விளையாட்டு வீரர் டங்கன் வைட்டின் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட தபாலுறை



ஒலிம்பிக் பதக்கம் பெற்ற இலங்கையின் முதலாவது விளையாட்டு வீரரான டங்கன் வைட்டின் நூறாவது பிறந்ததினம் மார்ச் முதலாம் திகதியாகிய நேற்று இடம்பெற்றது. அதை முன்னிட்டு விசேட முதல்நாள் தபாலுறை வெளியிடும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

பிரதி தபால் அதிபர் (நிர்வாகம்) வி.விவேகானந்தலிங்கம் ஜனாதிபதியிடம் இதனை வழங்கினார்.

இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜேரத்ன மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினதும் தபால் திணைக்களத்தினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்

## ஆண்டவர் இயேசுவின் காலத்தில் நோன்பு



தவக்கால சிந்தனை

ஆண்டவர் இயேசுவின் காலத்திலும் நோன்பு கடைப்பிடிக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் இயேசுவின் காலத்தில் யூதர்கள் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் மட்டும் கட்டாய நோன்பு கடைப்பிடித்தனர். இந்த நாள் வருடந்தோறும் -திஸ்ரி-எனும் யூதர்களின் பத்தாவது மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது (திப.27:9). நம்முடைய செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதங்களை அது குறிக்கும். இந்த நாளில் காலை முதல் மாலை வரை மக்கள் தங்களை இறைவன் தூய்மையாக்கும்படி அர்ப்பணிக்க வேண்டும்.

நோன்பு நேரங்களில் உண்ணவும், பருகவும், குளிக்கவும், ஒருவரை அருள்பொழிவு செய்யவும், மிதியடி அணியவும், தாம்பத்ய உறவு கொள்ளவும் யூதர்களின் திருச்சட்டம் தடைசெய்கிறது. சிறுவர்களும் ஒரு குறிப்பிட்ட அளவு நோன்பு மேற்கொள்ள ஆயத்தப் படுத்தப்பட்டனர்.

வாரத்தின் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய இரண்டு நாள்கள் நோன்பு இருந்தனர் (லூக்கா 18:12). இந்த இரண்டு நாள்கள் யூதர்களின் சந்தை கூடும் நாள்கள். சந்தைகளில் பல பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் அநேக மக்கள் திரளாக கூடுவார்கள். மாபெரும் மக்கள் கூட்டத்தில் தங்கள் பகட்டு நோன்பை பகிரங்கப்படுத்தினார்கள். இவர்கள் தலையில் எண்ணெய் தேய்க்காமல், முகத்தைக் கழுவாமல், முகவாடலாய் தோன்றினார்கள். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்க வேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொண்டார்கள்.

பெரும்பாலானவர்கள் நோன்பிருத் தலை சுய அர்ப்பணிப்பாக கருதுவதற்கு பதிலாக, சுய கவுரவமாக, சுயநீதியாக கருதிக் கொண்டு பிறர் பார்க்க வேண்டும் என்றே நோன்பிருந்தனர். ஆதலால் ஆண்டவர் இயேசு நோன்பு பற்றி யூதர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என எடுத்துக்காட்டுகிறார்.

# கோட்டாவை பிரதமராக்க ஜனாதிபதி மைத்திரி முயற்சி



ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 02

முன்னாள்பாதுகாப்புசெயலாளர்கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் ஊடாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் அரசியல் அவசியம் என்ன என்பது கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அவர் செயற்பட்ட முறையில் தெளிவாக தெரிகின்றது. அவர் ஜனாதிபதி பதவியை விட்டு விலகமாட்டார். அது தெளிவாகியுள்ளது.

இதனால், மீண்டும் ஜனாதிபதியாக அவருக்கு, மஹிந்தவிடம் உள்ள வாக்குகள் அவசியம். இதன் காரணமாக மஹிந்த ராஜபக்ஷவை தவிர அவரது குடும்பத்தின் ஏனையவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்குள்ளது.

எனவே, கோட்டாபய ராஜபக்ஷவை இணைத்துக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை பொன்சேகாவுக்கு வழங்குவதில் சிக்கல்

சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியைபீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகாவுக்கு வழங்குவது தொடர்பில் நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

முன்னதாக இந்த விடயத்தில் மஹிந்தராஜபக்ஷதரப்பினர்கடுமையானஎதிர்ப்பைவெளியிட்டிருந்தனர்.

அதனையடுத்து அரசில் உள்ள சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் சரத்பொன்சேகாவுக்குசட்டம், ஒழுங்கு அமைச்சு வழங்கப்படக் கூடாது என்று போர்க்கொடி உயர்த்தியிருந்தனர்.

தற்போது சட்டம், ஒழுங்கை அமுல்படுத்தும் பொலிஸ் திணைக்களத்தின் உயரதிகாரிகள் பலரும் இந்த விடயம் தொடர்பாக தீவிர எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

எந்தக் கட்டத்திலும் சரத் பொன்சேகா, குறித்த அமைச்சுப் பதவிக்கு நியமிக்கப்படக் கூடாது என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற சரத் பொன்சேகா – ஜனாதிபதி சந்திப்பின்போது ஜனாதிபதி தரப்பில் இருந்து பொன்சேகாவுக்கு எதிர்மறையான பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலையில் மயங்கி விழுந்த மாணவி உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 02

அவிஸாவலை - தெய்யோவிட்ட பகுதியில் மாணவி ஒருவர் பாடசாலை மைதானத்தில் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெய்யோவிட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவி ஒருவரே நேற்று முன்தினம் மைதானத்தில் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சிரட்டைகளைப் பயன்படுத்தி நடக்கும் விளையாட்டுப் போட்டியில் ஈடுபட்டிருந்தபோதே மாணவி மயங்கி விழுந்துள்ளார்.

தொடர்ந்து அவிஸ்ஸாவலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# கிழக்கு மாகாண பட்டதாரிகள் நியமனத்தில் அநீதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மட்டக்களப்பு,மார்ச் 02

கிழக்கு மாகாண பட்டதாரிகள் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதுஎனமனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் வேலையற்ற பட்டதாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தவை வருமாறு:–

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் தொழில் உரிமைப் போராட்டம், கடந்த ஒரு வருட காலமாக இடம்பெற்றதன் பிரகாரம், கிழக்கு மாகாண சபையால் கடந்த காலங்களில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், தொடர்ந்தும் பட்டதாரிகளின் போராட்டத்துக்குச் செவிசாய்க்காத மத்திய, மாகாண அரசாங்கங்கள், எமக்கான அநீதியையே இழைத்துக் கொண்டிருக்கின்றன.

தற்போது கிழக்கு மாகாண சபையால் வழங்கப்படவுள்ள 387 நியமனங்களும், கிழக்கில் உள்ள பட்டதாரிகளுக்கு ஓர் அநீதியான முறையிலே வழங்கப்படுகின்றமையை உணரக் கூடியதாகவுள்ளது.

ஏற்கனவே எம்மால் ஜனாதிபதியிடம் மகஜர் கையளித்ததன் பிரகாரம் கிழக்கிலுள்ள 2 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு, நிதி அனுமதியை வழங்குவேன் என உறுதியளித்துள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர், எதிர்வரும் மாதம் 387 பட்டதாரிகளை நியமிப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றார்.



இந்த நியமனமும் அநீதியான முறையிலேயே இடம்பெற இருக்கிறது. இந்நியமனத்தின் மூலம் தமிழ்மொழிமூல பட்டதாரிகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 10 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 44 பேரும் நியமிக்கப்பட உள்ளனர்.

ஆனால், சிங்களமொழிமூல பட்டதாரிகள் அம்பாறை மாவட்டத்தில் 122 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 127 பேரும் நியமிக்கப்படவுள்ளமை, எமது தமிழ்மொழிமூல பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

இந்த அநீதியை எதிர்த்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாங்கள் முறைப்பாடு செய்துள்ளோம். அத்தோடு, பிரபல சட்டத்தரணி ஊடாக, கிழக்குமாகாணப்பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இவ்வாறான நிலை தொடருமாயின், எதிர்வருகின்ற மாகாணசபைத் தேர்தலிலே, பட்டதாரிகளாகிய நாங்கள், எமக்கான அநீதியை எதிர்க்கும் பொருட்டு, தேர்தலில் களமிறங்கி, எமக்கான பலத்தை நாங்கள் இந்த மாகாண சபைக்கு எதிராக நிரூபிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

# நியமனத்தில் அநீதி இழைக்கப்படவில்லை

## கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்02

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகள் நியமனத்தில், எவ்வித அநீதியும்இழைக்கப்படவில்லையென, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜீ.திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :–

நான் அறிந்தவரை, நியமனத்தில் அநீதிகள் இடம்பெறவில்லை. நீதியின் பக்கமே நான் நிற்கின்றேன். அதனால் நியமனம் வழங்கும் விடயத்தில், யாரும் அதிருப்தியடையத் தேவையில்லை.

கிழக்கு மாகாண சபையால், 2017ஆம் ஆண்டு ஆயிரத்து 440 பேருக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதி கிடைத்தது. அதில் தமிழ்மொழி மூலமாக ஆயிரத்து50பேருக்கு அனுமதி கிடைத் தமையுடன், சிங்களமொழியில் 390 பேருக்கு நியமனம் வழங்க அனுமதி கிடைத்தது.

இதில் முதற்கட்டமாக 958 பேருக்கு தமிழ் மொழி மூலமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியில் 169 பேருக்கும் மொத்தமாக ஆயிரத்து 127 பேருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இரண்டாம் கட்டமாக, நாளை 3ஆம் திகதி, சிங்கள மொழி மூலமாக 222 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதுடன், தமிழ் மொழி மூலமாக 91 பேருக்கும் மொத்தமாக 313 பேருக்கு நியமனம்வழங்கப்படவுள்ளன.

ஒன்பதாம் இடத்தில் காணப்படும் கிழக்கு மாகாணக் கல்வித்துறையை மேம்படுத்தும் நோக்கிலே, அதிகளவில்பற்றாக்குறையாகக் காணப்படும் பாடசாலைகளுக்கே, இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# காட்டு யானைகளின் அட்டகாசம்

திருகோணமலை,மார்ச்.02

திருகோணமலை, மூதூர், ஷாபிநகர் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள், வீடொன்றையும் பலசரக்குக் கடையொன்றையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளன.

அத்தோடு, வீட்டிலிருந்த நெல் மூடைகளையும் உட்கொண்டு விட்டுச் சென்றுள்ளன எனவும் பயன்தரும் வாழை மரங்களையும் துவம்சம் செய்துள்ளன எனவும், பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் அட்டகாசம் காணப்படுகின்றமையால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் கோரிக் கை விடுத்துள்ளனர்.

(ப)

# மட்டக்களப்பு வான்பரப்பில் வட்டமிட்ட விமானம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளின் வான்வரப்பில் நேற்றுக் காலை வேளையிலிருந்து விமானங்கள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன. அப்பகுதி மக்கள் அதனை அதிசயமாகப் பார்த்தனர்.

சுமார் 5 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இவ்வாறு வான்பரப்பில் வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. அதை அவதானித்த பொதுமக்கள், கடந்த யுத்தகாலத்தில் ஒரே தடவையில் அதிகளவான விமானங்கள் மட்டக்களப்பு வான்பரப்பில் பறந்ததற்குப் பிற்பாடு, தற்போது மீண்டும் அவற்றைக் காண்கிறோம் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் மூவர் கைது

மட்டக்களப்பு,மார்ச் 02

மட்டக்களப்பு, உன்னிச்சைப் பிரதேசத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோதத் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனரென, ஆயித்தியமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உன்னிச்சை குளத்துக்கருகில், நேற்று முன்தினம் மாலை, அம்பிளாந்துறையைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீன்பிடி வலைகளும் வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



ஆயித்தியமலைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், அப்பிரதேசத்தில் சிவில் உடையில் பதுங்கியிருந்த போது, இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

மேற்படி சந்தேகநபர்களை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




# இலங்கையில் துறைமுகம், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை இந்தியா!

## இந்தியாவில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் துறைமுகங்களைக் கட்டவோ, நெடுஞ்சாலைகளை அமைக்கவோ இந்தியா ஆர்வம்காட்ட வில்லை என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பெங்களூர்சென்றிருந்தமஹிந்த ராஜபக்ஷ, அன்றிரவு அங்கு தங்கியிருந்து நேற்று முன்தினம் அதிகாலையில் ஏழுமலையான் ஆலயத்தில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு, நேற்று முன்தினம் மீண்டும் பெங்களூர் வழியாக கொழும்பு திரும்பியுள்ளார்.



பெங்களூர் விமான நிலையத்தில் 'தி ஹிந்து' ஊடகவியலாளருக்கு, இலங்கையில் சீனாவின் திட்டங்களின் மீது அதிகரித்துள்ள ஆர்வம் குறித்து அளித்துள்ள செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகளை அமைக்கும் பணிகளை முதலில் நாங்கள் இந்தியாவுக்கே வழங்கினோம்.

ஆனால், எப்படியோ அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை அமைக்க அவர்கள் ஆர்வமாக இருக்கவில்லை. போர் நடந்து கொண்டிருந்த நேரம் என்று நினைக்கிறேன்.

வேறென்ன செய்வது? நாங்கள் சீனாவிடம் சென்றோம். இதனைப் பற்றிக் கூறினோம். அந்தத் திட்டத்தை அவர்கள் உடனடியாகவே ஏற்றுக் கொண்டார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது ஒரு வணிகப் பரிமாற்றம் மட்டுமேயாகும்.

துரதிஷ்டவசமாக தற்போதைய அரசு எல்லாவற்றையும் விற்றுவிட்டது. எமது கொள் கை தனியார் மயமாக்கலுக்கு எதிரானதாக இருந்தது. தற்போதைய அரசு, 99 ஆண்டுகள் குத்தகைக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றுவிட்டது.

இந்தியாவுடன் எனது நாடு நல்ல உறவைக் கொண்டிருக்கிறது. ஆனால், அவர்கள் கடந்த காலங்களில் எம்மைப் பற்றி தவறான புரிதல்களைக் கொண்டிருந்தனர்.

இந்தியா ஒரு பதின்ம வயது பெண் என்று ஓர் இந்தியத் தூதுவர் எனக்குக் கூறினார், ஏனென்றால், பதின்ம வயதுப் பெண்கள் தவறான புரிதல்களைக் கொண்டிருப்பார்கள். இதனைக் கூறியவர் இந்தியா வின் முன்னாள் தூதுவர் நிருபமா ராவ்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை சிறந்ததாக இருந்த அதேவேளை, சில விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

### மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ்

# வறட்சி வலய விவசாயிகளின் அறுவடையை சேமித்து வைப்பதற்கு களஞ்சியசாலைகள்!

வறட்சி வலயங்களில் விவசாயிகளின் அறுவடைகளை களஞ்சியப்படுத்வதற்காக களஞ்சியசாலை வசதிகளை செய்துகொடுக்கும் நோக்கில் அனுராதபுரம், மொனறாகலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள களஞ்சிய கட்டடத்தொகுதிகள் அந்த மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பின்கீழ் தற்போது செயற்பட்டு வருகின்றன.

தற்பொழுது கட்டடப்பணிகள் பூர்த்தி செய்யப்பட் டுவருகின்ற கிளிநொச்சி, பொலநறுவை மற்றும்



இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள களஞ்சியசாலைகளின் செயற்பாடுகளை இந்த வருடத்திற்குள் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் களஞ்சியக் கட்டடத்தொகுதியில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் முகாமைத்துவத்திற்காக ஒப்பந்த உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தப் பணிகளை ஒழுங்குறுத்துதல் மற்றும் கண்காணிப்பதற்கு இதன் மாவட்டங்களில் உள்ள செயலாளர்களுக்கு அதிகாரத்தை வழங்கு வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

# போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

புங்குடுதீவு, மார்ச் 02

புங்குடுதீவு கலைப்பெருமன்றம், அம் பலவாணர் கலைச்சங்க ஆண்டு விழாவை முன்னிட்டு தீவகப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை, பேச்சுப்போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் தரம் 8 முதல் 10 வரையான மாணவர்கள் கீழ்பிரிவாகவும், தரம் 11 முதல் 13 வரையான மாணவர்கள் மேற்பிரிவாகவும் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் தொடர்பான விவரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பன கோட்டக்கல்வி அலுவலகங்கள்ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. போட்டிகளில் பங்குகொள்வதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விழா ஒழுங்கமைப்பாளர், அம்பலவாணர் கலையரங்கம், புங்குடுதீவு – 12 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. போட்டிகள் அடுத்த மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் நடைபெறவுள்ளன.

### தம்புத்தேகம சம்பவம்:

# 50 பேருக்கு விளக்கமறியல்; ஒன்பது பேருக்குப் பிணை!

கொழும்பு, மார்ச் 02

அனுராதபுரம் - தம்புத்தேகம நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 59 பேரில் 50 பேர் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தம்புத்தேகம நீதிவான் சமிலா நதிஷாணி முன்னிலையில் நேற்று முன்தினம் இரவு அவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டனர் அப்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அப்போதே இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற உத்தரவை மீறி கலகம் விளைவிக்கும் வகை யில் செயற்பட்டமை தொடர்பில் 59 சந்தேகத்துக்குரியவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுள், 2 பெண்கள் அடங்கலாக 50 பேர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.



இதேவேளை, ஆறு ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் சந்தேகத்துக்குரியவர்கள் அடங்கலாக 9 பேர் சரீரப்பிணையில் செல்ல தம்புத்தேகம நீதிவான் அனுமதியளித்துள்ளார்.

# கைது செய்ய வேண்டிய நபரான ரணிலுக்கு பொலிஸ் திணைக்களமா?

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 02

ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்வதற்குப் பதிலாக தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்றதோ வேறொன்று என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட வேண்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சை தன்னிடம் எடுத்துக் கொண்டுள்ளார் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்பொழுது நாட்டில் ஒருவ கையான அராஜக நிலையொன்று உருவாகியுள்ளது. தேர்தல் முடிவடைந்து 3 வாரங்கள் ஆகியுள்ள நிலையில் உள்ளூராட்சி சபையை நிறுவ முடியாமல் போயுள்ளது.

நாட்டில் அரசு ஒன்று இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் குழுவும், மைத்திரிபால சிறிசேனவின் குழுவும் தமது அதிகார போட்டிக்காக ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக் கொள்கின்றன. இது சிலவேளை ஆவேசமாக மாறி விடலாம். தேர்தல் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் போது ஐ.தே.க.யுடன் இணையமாட்டோம் என்றனர். தேர்தலின் பின்னரும் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலக்குவதாக ஜனாதிபதி கூறிவந்தார்.

இவ்வாறு பதவி விலக்குவதற்குரிய பிரதமருக்கே தற்பொழுது அவரிடம் இருந்த பதவிக்கும் மேலதிகமாக ஒரு பதவியையும் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த இரு குழுக்களும் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்குப் பதிலாக தங்களது தேவைகளை நிறைவே ற்றிக் கொள்வதிலேயே முனைப்போடு உள்ளன என்றும் அனுர குமாரதிஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

கணனி மற்றும் ஆங்கில கற்கை நெறிகள்
Computer Literacy & English Language Skills Development & Training - For absolute beginners/ Students / Youths



பாடசாலை கல்வியைத் தொடர்ந்து தொழில் துறைகளுக்குள் செல்வதற்கு முன்னர் உங்கள் கணனி மற்றும் ஆங்கில அறிவை விருத்திசெய்து கொள்ளுங்கள்

அனுமதி இலவசம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பங்களில் உள்ள கல்விகற்கும் மாணவர்கள், இளையோர்கள் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகிய துறைகளில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் முற்றிலும் இலவசம்.

இச்சலுகை நலிவுற்றோருக்கான திறன்விருத்திச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக Ratnam Foundation [UK] நிதி உதவியுடன் Aaruthal நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பமாக இருக்கின்றது.

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.03.2018
தாமதமின்றி பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

Aaruthal's CiTE BELIEVE TO ACHIEVE CENTRE FOR IT EDUCATION

021 221 4099
077 292 8853

No. 125 Main Street, Jaffna
(near to Courts Complex)

Powered by RATNAM FOUNDATION
Facilitated by Aaruthal

# பொலிஸார் சிலருக்கு அவசர இடமாற்றம்!

கொழும்பு, மார்ச் 02

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உள்ளிட்ட 15 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவசர இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிப்படி சேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு வடக்கு பிரிவில் கடமையாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் சொய்சா பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஏனைய பொலிஸ் அதிகாரிகளுள் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மூவர் மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 11பேர் அடங்குகின்றனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# தினசரி ராசி பலன்
(02.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம் மாசித்திங்கள் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிரதமைத்திதி பி.இ.4.05 மணி வரை பின்னர் துவிதீயை. நட்சத்திரம். பூரம் இரவு 10.08 மணி வரை பின்னர் உத்தரம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.53 மணி முதல் 12.22 மணி வரை*
**சுபநேரம்** - *காலை 6.21 மணி முதல் 7.51 மணி வரை*
**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத தேய்பிறை பிரதமை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூரம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், பெருமையும் உண்டாகும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். தொழிலில் அலைச்சல் அதிகரிக்கும். சகோதரர்கள் சொத்து சம்பந்தமாக பிரச்சினைகள் உண்டாகும். புத்திரர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். தொழிலில் கடின உழைப்புக்கு பலன் குறையும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். உத்தியோகத்தில் எதிர்பாராத பதவி உயர்வு கிடைக்கும். நீண்ட காலப் பிரச்சினை தீரும்.

**சிம்மம்** அதிஷ்டமான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். அரசவழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

**கன்னி** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சலசலப்பு அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**துலாம்** சுபீட்சமான நாள். தன லாபம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரும்.

**விருச்சிகம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். வியாபாரம் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**தனுசு** சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு சுப நிகழ்ச்சிகளால் களை கட்டும். சுபீட்சம் உண்டாகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். உறவினர்களும் தொல்லை தருவார்கள் செய்யும் தொழிலில் இடையூறுகள் உண்டாகும்.

**கும்பம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு குறைவடையும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக பெறுவார்கள். மணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று பெற்றோர் ஆசிரியரின் பாராட்டைப் பெறுவார்கள்.

**சந்திராட்டம நாள்: உத்தராடம் 2ஆம், 3 ஆம், 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# அம்பாறை தாக்குதல் சம்பவம் தொடர்பில் உணவு மாதிரிகள் இரசாயன பகுப்பாய்வு!

## 5 பேர் பொலிஸாரால் கைது




கொழும்பு, மார்ச் 02

அம்பாறை நகரில் ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் 5பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தச் வன்முறைக்குவந்தகுழுவினரை அடையாளம் காண பிரதேசத்தின் பல முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கண்காணிப்பு கமரா பதிவுகளைப் பெற்று அதனை ஆராய்ந்து வரும் சிறப்பு பொலிஸ் குழு, சம்பவத்தின்போது சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்களை மையப்படுத்தியும் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் தொலைபேசி பகுப்பாய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து அந்த அறிக்கையைப் பெறவும் அதனை மையப்படுத்தி மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் பொலிஸார் நீதிவானின் அனுமதியையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய கோணங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தெளிவுபடுத்தியுள்ள நிலையில் கிழக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபில ஜயசேகர, மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வெதசிங்க ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த டி விஜேசேகரவின் நேரடி கட்டுப்பாட்டில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் மாலை வரை இடம்பெற்ற விசாரணைகளில் 30 இற்கும் மேற்பட்ட முக்கிய வாக்கு மூலங்களைப் பெற்றுள்ள பொலிஸார், பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகத் தொடர்ந்தும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து செயற்படுவோம் எனப் பிரதேசத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், தாக்குதலுக்கு உள்ளான பள்ளிவாசல் நேற்று மீளவும் தொழுகை நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டதுடன் பள்ளிவாசலின் பாதுகாப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் இருந்து செயற்பட்டோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனைகளையும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் தொடர்கின்றன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 02

Dream house.lk அனுசரணையில் திருநெல்வேலி கிழக்கு தமிழ்த்தாய் மன்றம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இல.31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி ஊடாக, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

இதில் இலவசமாக, 100 பேருக்கு கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கப்படுவதுடன், யாழ்.மாநகர சபை சித்த ஆயுள் வேத வைத்தியர்கள் கலந்து கொண்டு இலவச நீரிழிவு, இரத்தப் பரிசோதனை செய்வதுடன் இலவசமாக ஆயுள் வேத மருந்துக்கள் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கனும் புலவர் எம்.எஸ்.ஸ்ரீதயாளனும் கலந்து கொள்வார்கள்.

அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தமிழ்த்தாய் மன்றத்தலைவர் வே.நவமோகன் அழைப்பு விடுத்துள்ளார்.

# பொதுக்கூட்டம்

வடமராட்சி, மார்ச் 02

கொம்மாந்துறை கம்பர்மலை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

* * *

தெல்லிப்பழை, மார்ச் 02

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு சங்கத்தின் 17 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் ரி.எம்.செல்வராசா தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் க.சிவஸ்ரீ, பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன் மற்றும் விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து இவ் வருடத்திற்கான நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெறும்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை –

யாழ். பிரதேசத்தில் – ஏ9 வீதியில் (பூங்கங்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதிசந்திவரை), பாரதிலேன், பூங்கங்குளம் வீதி ரயில் கடவை வரை, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, மண்டை தீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை ஒருபகுதி, மண்கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு இலங்கை வெலுசுமனை கடற்படைமுகாம் போன்றபிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்று யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
கூட்டத்தில் பேரவையின் இணைத்தலைவரும் வடக்கு முதலமைச்சருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவரின் உரை இங்கு தரப்படுகிறது.



## மக்களின் தீர்ப்பை அடுத்து

# இறங்கி வந்துள்ளன முரண்டுபிடித்த தமிழ்த் தலைமைகள்!

## அவர்கள் யதார்த்தத்தை நோக்கி பயணிக்கின்றமை வரவேற்கத்தக்கதே

தமிழ் மக்கள் பேரவை தனது வேகத்தைக் கூட்டிப் பயணிக்க வேண்டிய தருணம் தற்போது உருவாகியுள்ளது. சென்ற முறை நாம் கூடியபோது தேர்தல்கள் விரைவில் நடைபெற இருப்பதாகக் கூறினோம். ஆனால் தேர்தலில் தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம் என்ற ரீதியில் பக்கச் சார்பற்று விளங்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால் எம்முடன் இருக்கும் கட்சிகள் தேர்தலில் கலந்து கொண்டமையை தமிழ் மக்கள் பேரவை எதிர்க்கவில்லை. தேர்தல் முடிவுகளின்படி எமது இயக்கம் வெளியிட்டு வந்த கருத்துக்கள், கொள்கைகளை மக்கள் போதிய அளவு ஏற்றுக் கொண்டிருந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

இது எமது கொள்கைகளுக்கு வெற்றி என்றே கூற வேண்டும். அதாவது எம்முடன் சேர்ந்திருந்த சேர்ந்திருக்கும் கட்சிகளின் வெற் றிகள் ஒருபுறமிருக்க இயக்கமான எமக்கும் கடந்த தேர்தல் சில உண்மைகளைப் புலப்படுத்தியுள்ளது. ஏனெனில் தமிழ்த் தலைமைத்துவம் தாம் கூறுவ தையே மக்கள் என்றும் போல் ஏற்க வேண்டும் என்று தேர்தலின் போது கூறிவந்தது. எம்மைத் தீவிரப் போக்குடையவர்கள் என்று போட்டுடைத்தது. ஆனால் கணிசமான அளவு மக்கள் அவர்கள் கருத்துக்களை நிராகரித்தார்கள். இதன் பொருட்டு தமிழ்த் தலைமைகளின் தற்போதைய கருத்துக்கள் முற்றிலும் மாறிவருகின்றமையையும் நாம் காண்கின்றோம்.

**வீம்பு பேசியவர்களின் இன்றைய போக்கில் மாற்றம்**

எம்மைத் தீவிர போக்குடையவர்கள் என்று குறை கண்டுபிடித்தவர்கள் இப்பொழுது தாமும் அதே கொள்கைகளை, கருத்துக்களை வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றனர். வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டும் என்கின்றார்கள், சுயாட்சி வேண்டும் என்கின்றார்கள், தேசியம் பேசுகின்றார்கள், சமஷ்டி வேண்டும் என்கின்றார்கள். வீம்பில் பேசிய சிலர் தொடர்ந்து நாம் கூறிவந்த கருத்துக்களை இப்பொழுது விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கின்றார்கள் போல் தெரிகின்றது.

ஆனால், தமிழ் மக்கள் பேரவை கட்சித் தலைமைத்து வங்களின், தமிழ்த் தலைமைத்துவங்களின் எழுச்சி வீழ்ச்சிகளுடன் சம்பந் தப்பட்ட ஓர் இயக்கம் அல்ல. அதற்கு கட்சி ஒழுங்கமைப்பு இல்லை, ஆனால் நிர்வாக ஒழுங்கமைப்பு உண்டு. கட்சி எதிர்பார்ப் புக்கள் இல்லை, ஆனால் தமிழ் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்களும் எமது எதிர்பார்ப்புக்களே. கட்சிகளின் ஆதரவாளர்கள் கட்சியையே முதன்மைப் படுத்துகின்றார்கள். பேரவையின் ஆதரவாளர்கள் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள். ஆனால், கொள்கை ரீதியில் ஒன்றுபட்டவர்கள்.

அவ்வாறான கொள்கை ரீதியான ஒற்றுமையே இப்பொழுது முரண்டுபிடித்த எமது தமிழ்த் தலைமைகளையும் எம் மொழியைப் பேசவைத்துள்ளது. ஆனால் அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அரசியல் ஆய்வாளர்கள் அவற்றைக் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகின்றேன். தலைமைகள் யதார்த்தத்தை நோக்கிப் பயணிப்பது வரவேற்கத்தக்கதே.

தமிழ் மக்கள் பேரவை எம் மக்களை ஒன்று சேர்ப்பது, புரிந்துணர்வுடனான அவர்களின் குரல்களை ஒலிக்கச் செய்வது, தமிழ் மக்களின் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டி எம்மை நாமே முன்னேற்றிச் செல்வது, அரசியல் ரீதியாக எமது உரித்துக்களைப் பெறப் போராடுவது, உலகத் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குதல் போன்ற பல குறிக்கோள்களை முன் வைத்து மிக அமைதியாக முன்னேறி வருகின்றது.

**பேரவையின் ஆதரவுக்காக காத்திருக்கும் இளைஞர் கூட்டம்**

அந்த வகையில் எமது இளை ஞர்களை ஒன்று சேர்க்கும் ஒரு பெரும் பொறுப்பு எம்மேல் சுமத்தப்பட்டுள்ளது. படித்த, பட்டம் பெற்ற, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருக்கும் இளை ஞர் யுவதிகளும், படிப்பை இடைநிறுத்தி வேலைகளுக்காக அலைந்து திரியும் இளைஞர் யுவதிகளும், விவசாயம், மீன் பிடி போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக் கும் இளைஞர் யுவதிகளும் இன்னும் பல இளநெஞ்சங்களும் உங்கள் தமிழ் மக் கள் பேரவைக்கு எப்பேர்ப்பட்ட ஆதரவை நாம் வழங்கலாம் என்று கேட்டு வருகின்றார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் என்னை வட மாகாண சபையில் இருந்து வெளியேற்ற நடவடிக் கைகள் எடுத்த போது வந்து என்னைச் சந்தித்து தமது ஆதரவை நல்கிய பெரும்பான்மையான இளைஞர் குழாம்கள் எம்மோடு இணைந்து பயணிக்க நாட்டம் கொண்டுள்ளனர். அவர் களை ஒன்றிணைக்க எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. எனி னும் தொடர்ந்து அவர்கள் தமது கருத்துக்களை எனக்கு வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

தற்போது எமது இளைஞர் அணிகளை உருவாக்கத் தக்க தருணம் வந்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இளைஞர் அணிகளை ஒன்று சேர்க்கவும் அவர்களுக்கு எமது தமிழ் மக்கள் பேரவையூடாக போதிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டியுள்ளது. அதன் பொருட்டு எம்மிடையே போதிய கரிசனை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**அனந்தி, அருந்தவபாலன் ஐங்கரநேசன் இங்கே வந்துள்ளனர்; அவர்களும் எமக்கு உதவ முடியும்**

பெண்கள் மத்தியிலும் இளைஞர் யுவதிகள் மத்தியிலும் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ள மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் இங்கு வந்துள்ளார். பெண்கள், இளைஞர், யுவதிகள் சார்பான அவரின் உதவி எமக்கு எப்பொழுதும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. கல்லூரி அதிபராகக் கடமையாற்றியிருந்த அருந்தவபாலன், இளைஞர் யுவதிகள் மத்தியில் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ள அவரும் இன்று இங்கு வந்துள்ளார். அவர் கள் போன்றவர்களும் எமக்கு போதிய உதவிகளை நல்கலாம் என்று எதிர்பார்க் கின்றோம்.

பசுமை இயக்கத்தில் ஊறியிருக்கும் முன்னைய அமைச்சர் பொ.ஐங்கரநே சனும் இங்கிருக்கின்றார். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல மரங்களையும் விருட்சங்களையும் யுத்தத்தின் போது இழந்துவிட்டன. உடனே இழந்த மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள் நாட்டு ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அவரின் பசுமை இயக்கம் எம்முடன் சேர்ந்து இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஒழுங்குபடுத்துவதில் அவரின் திறனை நான் அவதானித்துள்ளேன். இளைஞர் யுவதிகள் மத்தியிலும் அவருக்கு நல்லெண்ணம் உண்டு. அவரும் எமக்கு உதவியாய் இருப்பார் என்று நம்புகின்றோம்.

**தமிழ் மக்கள் பேரவை எம் மக்களை ஒன்று சேர்ப்பது, புரிந்துணர்வுடனான அவர்களின் குரல்களை ஒலிக்கச் செய்வது, தமிழ் மக்களின் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டி எம்மை நாமே முன்னேற்றிச் செல்வது, அரசியல் ரீதியாக எமது உரித்துக்களைப் பெறப் போராடுவது, உலகத் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குதல் போன்ற பல குறிக்கோள்களை முன் வைத்து மிக அமைதியாக முன்னேறி வருகின்றது.**

இன்றைய சூழலில் எமது மக்களிடையே புதியதொரு கலாசாரத்தை உண்டுபண்ண வேண்டிய ஒரு கடப்பாடு எம்மைச் சார்ந்துள்ளது. கட்சிகளுக்கு அடிமைப் படாது தமிழ் மக்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு சேவையில் ஈடுபட வேண்டியுள்ளது. இளைஞர் யுவதிகளுக்கு ஆற்றல் அளிக்கும் செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும்.

**இந்தியாவுடன் உறவு பேணுவதை சில கட்சிகள் விரும்பவில்லை**

உதாரணத்திற்கு பல துறைகளில் தகைமையும் திறனும் அடைய புலமைப் பரிசில்கள் பல நாடுகளால் வழங்கப்படுகின்றன. அவற்றை எம்மக்கள் பாவிக்க முன்வரலாம். அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எமது பேரவை எடுக்கலாம். உதாரணத்திற்கு இந்தியா தனது புலமைப் பரிசில்களை எமது இளைஞர் யுவதிகள் போதியவாறு பாவிப் பதில்லை என்று அங்கலாய்க்கின்றது. இது பரிசீலிக்கப்பட வேண்டும்.

சில அரசியல் கட்சியினர் நாங்கள் இந்தியாவுடன் கிட்டிய உறவைப் பேணுவதை விரும்பு கின்றார்கள் இல்லை. தமிழ் மக் களுக்கு போரின் கடைசி நாள்களில் நடந்தவற்றிற்கு இந்தியாவும் பொறுப்பு என்ற முறையில் அவ்வாறான ஓர் எண்ணம் அவர்களுக்கு இருக்கலாம்.

ஆனால் அன்றைய நிலை வேறு. இன்றைய நிலை வேறு. இந்தியாவின் அனுசரணை இல்லாமல் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தமது நியாயமான குறிக்கோள்களை அடைய முடியாது என்ற எண்ணம் கொண்டவர்களும் எம்முள் இருக்கின்றார்கள்.

ஆகவே எம்மிடையே இது பற்றிய கருத்து வேறுபாடுகளை முடிந்த ளவு நீக்குவது அவசியமாகின்றது. எல்லா விடயங்களிலும் எம்மிடையே கருத்தொருமிப்பு ஏற்பட முடியாது. ஆனால் ஒருவர் ஒருவருக்கான கருத்துக்களைப் புரிந்து கொண்டு முன்னேறலாம்.

**தமிழ் மக்கள் பேரவை என்றும் மக்கள் இயக்கமே**

எமது தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாறுமா என்ற கேள்வி மேலும் மேலும் எம்மிடம் கேட்கப்படுகிறது. ஒரு மக்கள் இயக்கம் கட்சிக் கட்டுக்கோப்புக்களில் சிலவற்றைப் பின்பற்றலாம். ஆனால் கட்சியாக மாறிவிடக் கூடாது. அதனால் தான் நாங்கள் சென்ற தேர்தலின் போது எமது கொள்கைகளை, நோக்குகளைக் கட்சிகள் வெளிக்காட்டுவதை வரவேற்றோம். ஆனால் நாங்கள் அவர்களுடன் சேர முன்வரவில்லை. மக்கள் இயக்கத்தைக் கட்சிகள் ஆதரிக் கலாம். கட்சிகளை மக்கள் இயக்கம் ஆதரித்தால் அது மக்கள் இயக்கமாக இருக்க இலாயக் கற்றதாகிவிடும். ஒவ்வொரு கட்சிக்கும் ஏதோ ஓர் அடையாளம் உண்டு. வரலாறு உண்டு. மக்களிடையே மக்கள் இயக்கத்திற்கு இருக்கும் அடையாளம் வேறு. நாம் கட்சி பேதங்களுக்கு அப் பாற்பட்ட வர்கள். மக்களுடன் நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்த விரும்புபவர்கள். மக்களின் சேவை யொன்றே எமது இயக்கத்தின் குறிக்கோள். எந்த நன்மைகளையும் எமது இயக்கம் எவரிடமும் எதிர்பார்க்காது. ஆனால் எம்மைத் திறம்பட நடத்த எம் மக்கள் தரும் கொடைகளே எம்மை வழிநடத்துவன.

இந்த அடிப்படையில் நாங்கள் மத்திய குழுவாக இங்கு இன்று கூடியிருக்கும் அதே வேளையில் எமது குறிக்கோள் களை நெறிப்படுத் தும் போது கட்சி அரசியல் சார்பற்ற ஒரு சிலரை செயற்குழுவாக நியமித்து அவர்கள் ஊடாக தீர்மானங்களை எடுத்தால் நல்லது என்று அபிப்பிராயப் படுகின்றோம். மத்திய குழு இன்றிருப்பது போல் தொடர்ந்து இருக்கும்.

**அறிவுரை வழங்கலாம்**

இன்று வந்திருக்கும் மூவரையும் உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் மத்திய குழுவினுள் உள்ளடக்கலாம்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)




யாழ். பிரதேச செயலகத்தில் வெள்ளி மாலை யாழ். பிரதேச கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் மாதாந்தக் கூட்டம் பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் இடம்பெற்றபோது இவ்வருடத்துக்கான 'யாழ் பாடி' நூல் மற்றும் கலாசார விழா சம்பந்தமாகவும் பன்னிருமாத விளக்கு செயற்படுத்தல் திட்டம் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. (இ-19)




யாழ். மாநகர சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய நா.தனேந்திரன் யாழ். கொட்டடி வாழ். மக்களினால் வரவேற்று கௌரவிக்கப்பட்ட போது மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் மற்றும் நுழைவாயில் லயன்ஸ் கழகத்தினரும் கலந்து கொண்டனர். (இ-19)





வட்டு.வடக்கு பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வுகளின்போது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் பிரதம விருந்தினர் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றமையையும், வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினரான வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி பிறேமினி பொன்னம்பலம் பரிசு வழங்குகின்றமையையும் காணலாம். அருகில் அதிபர் திருமதி கு.லோகநாதன் காணப்படுகிறார். (இ







யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஆசிரியர் ஆர்.எல்.றொபின்சனின் சேவை நலன் பாராட்டு விழா அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்றபோது, யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தேவகுமாரன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ்.அன்ரன், பழைய மாணவர் சங்க கனடாக் கிளை சார்பாக எஸ்.ஜெகதீஸ்வரன் மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். (இ-19)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 111

# உன்னைச் சரணடைந்தேன்



## ஆறுமுகம் ஆன பொருள்

அப்படிப்பட்ட ஒரு நாள். அன்று நல்ல மழை. எங்கள் வித்துவானுக்கு அன்று ஆனந்த மனநிலை. அவர் ஆனந்தம் எங்களுக்குள்ளும் தொற்றிக் கொள்ள, சிரிப்பு மழை பொங்கியது. இந்துக் கல்லூரியில் பெண் ஆசிரியைகள் இல்லை. 'ட்ரெயினிங்' காலத்தில் ஓரிருவர் வந்து போவர். பெண் வாசனை இல்லாத இடம் என்பதால் அங்கு வரும் முதிர் கன்னிகள் கூட முக்கியம் பெறுவர். அப்படி வந்தவர்களில் ஓர் இளம் ஆசிரியை. உணவுக்குச் சென்று விட்டுகொட்டும் மழையில் குடைபிடித்து உட்புகுந்தார். கவிதை செய்யும் நண்பன் ஒருவன் எங்கள் கூட்டத்தில் இருந்தான். மரியதாஸ் என்று ஞாபகம். வித்துவானின் உற்சாகம் அவனையும் தொற்றிக் கொள்ள, 'சேர் உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி, ஒரு கவிதையை நான் தொடங்குவன். அடுத்த அடி நீங்கள் சொல்லவேணும், முடியுமா?' சவால் விட்டான். 'ஓஹோ அப்படியா! எதைப் பற்றிப் பாடுவாய்.' வித்துவான் கேட்கும் பொழுதுதான், அந்த இளம் ஆசிரியை மழையில் நனைந்த படி உட்புகுந்தார். 'அதோ! அவர்தான் பாடுபொருள்.' நண்பன் சொல்ல வித்துவான் உற்சாகமானார். 'தொடங்கு பார்க்கலாம்' வித்துவான் உத்தரவு கொடுக்க, அவன் முதலடியைத் தொடங்கினான். '**மாரி மழை பொழிய**' என்று அவன் பாட்டை நிறுத்தி, வித்துவான் முகத்தைப் பார்க்க, நாங்களெல்லாம் உற்சாகமானோம். எங்கள் உற்சாகம் ஆசிரியர்களையுந் தொற்றிக்கொள்ள, குலுங்கிச் சிரித்தபடி சிவராமலிங்கம் மாஸ்டர், 'என்ன வித்துவான் தொடரலாமே' என்றார். 'அப்படியா?' சிறிது யோசித்த வித்துவான், '**மங்கையர்கள் குடைபிடிக்க**' என்று கவிதையைத் தொடர்ந்தார். நாங்கள் நண்பனைத் தூண்டினோம். உற்சாகமடைந்த அவன் உடனே தொடர்ந்தான். '**சாரி நனைந்திருக்க**' அவன் நிறுத்த, வித்துவான் முகத்தில் வெட்கத்துடன் கூடிய திகைப்பு. சற்று நாணினார். 'டேய் வம்புப்பெடி இவ்வளத்தோடவிடு' அவர் பின் வாங்க, 'அண்ணை, விட்டுட்டால் நீங்கள் தோற்றிட்டதாக அர்த்தம்.' வேலன் தூண்டினார். 'எட தம்பி! நானா தோற்பேன். சொல்லட்டுமா?' கேட்டு நிறுத்திய வித்துவான் பின் மீண்டும் நாணினார். 'சொல்லுங்கோ? சொல்லுங்கோ?' என நாங்கள் 'கோரஸாய்'க் குரல் கொடுக்க, சுற்றும் முற்றும் பார்த்து, நீ சொன்ன வரிகளைத் திருப்பச் சொல்லு! நான் முடிக்கிறன்' என்றார். நண்பன் வரிகளை அடுக்கினான். '**மாரி மழை பொழிய மங்கையர் குடைபிடிக்க, சாரி நனைந்திருக்க...**' நண்பன் நிறுத்த, இரகசியமான குரலில் குறும்பு கொப்பளிக்க, '**சங்கதிகள் தெரியுதம்மா ஆ ஆ**' என்று,வித்து வான் நீட்டி முடிக்கவும், நாங்கள் போட்ட சத்தத்தில் கல்லூரி கட்ட டமே ஒருதரம் ஆடிப்போனது.

★ ★ ★

ஆணவம், அகங்காரம், மமதை இங்ஙனம் பல சொற்களால் சொல்லப்படும் ஒன்று எல்லோரிடமும் இருக்கிறது. 'நான் என்பதன் வெளிப்பாடாய் அமையும் சொற்கள் இவை. இந்த நான் என்பது எது? தத்துவமாய் ஆராய இக்கட்டுரை பொருத்தமானதல்ல. ஆனால் ஒன்று இச்சொல்லை விளங்க முற்படுவது, அறிவின் ''மூலம்'' அறிய விரும்புவார்க்கு அவசியமான முயற்சி. இது பற்றிப் பலதரம் யோசித்திருக்கிறேன். எமது செயற்பாடுகளில் 'நான்' என்பதன் மூல வெளிப்பாடாய் அமையும் இயக்கம் எது? அறிவு தான் என்பது என் கருத்து. பல செயற்பாடுகளிலும் ஆணவத்தின் அடையாளம் வெளிப்பட்டாலும், அவ் எல்லாச் செயற்பாடுகளினதும் ''மூலமும்'' அறிவு தான் என்பதால், அறிவுதான் ஆணவத்தின் வித்தாய் விளங்குகின்றது. பலசாலி, தான் பலவீனப்பட்டால் அதை வெளிப்படையாய் சொல்கிறான். பணக்காரன் தான் ஏழ்மைப்பட்டால் அதை வெளிப்படையாய் சொல்கிறான். ஆனால் ஓர் அறிவாளி தான் மழுங்கி விட்டால், அதை வெளிப்படையாய் சொல்லத் தயங்குகிறான். நான் ஏழையாகி விட்டேன். என்பதிலோ, நான் பலவீனன் ஆகி விட்டேன் என்பதிலோ இல்லாத ஆணவச் சிதைவு, நான் முட்டாளாகி விட்டேன் என்பதில் இருக்கிறது. என்னிடம் வீரம் இல்லை, என்னிடம் செல்வம் இல்லை. என்னிடம் ஆற்றல் இல்லை. என்றெல்லாம் சொல்வதில் இல்லாத தயக்கம், என்னிடம் அறிவில்லை. என்று சொல்கையில், எல்லாருக்கும் உண்டாகிறது. காரணம், அறிவுதான் ஆணவ வித்து. அதனால் தான் கல்வியையும் கடக்க நினைத்தனர் ஞானியர். 'கற்பனவும் இனியமையும்' என்கிறார் மணிவாசகர். விளங்கியவர்களுக்கு இது விளங்கும். கல்வியைக் கடக்க முடியாமல், கஷ்டப்படும் கற்றோர் பலரைக் கண்டிருக்கிறேன். தெரியாது எனும் சொல் தெரியாதோர் நம் அறிவுலகிற் பலர். அதனால், அறியாததை அறிந்ததாய்ச் சொல்லி, தம் அறியாமையை அறிவித்து நிற்பார் இன்னும் பலர். அத்தகையோரைக் காணும்போதெல்லாம், வித்துவான் என் நினைவில் வருவார். கல்வியைக் கடந்து காட்டியவர் அவர். கல்வியை கடப்பதாவது? ஆணவத்தைக் கடப்பது. ஆணவத்தைக் கடப்பதாவது? தன்னைக் கடப்பது. வித்துவான் கடந்தார். விவரம் சொல்கிறேன்.

★ ★ ★

என், குருநாதர் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் பேச்சாளர்களின் பேச்சாளர். வாய் திறந்தால் தமிழ் ஆனந்த அருவியாய் கொட்டும். சிந்தனைக் கதவுகள் ஆயிரம் சடசடவெனத் திறக்கும். எங்கள் கம்பன் விழாவில் அவரது பேச்சு. முதற்தரமாய் யாழ் வந்திருந்தார். வித்துவானை விட பல வயது இளையவர் அவர். சபை நிறைந்து வழிந்தது. முன் வரிசை முழுதும் கற்றவர்கள் கூட்டம். அன்றைய பேச்சின் தலைப்பு 'காரைக்காலம்மையார்' வித்துவானுக்கு அம்மையிடம் ஏற்கனவே பெரிய அனுதாபம். இரண்டு பெண்களைப் பெற்றவர் வித்துவான். அவர்களில் உயிரை பதித்திருந்தார். அம்மையாரிலும் பிள்ளைகள் மேல் கொண்டது போல் அன்பு. 'பாவம் வாழ்க்கையை துலைச்சுப் போட்டுது' என்று எத்தனையோ தரம் என்னிடம் அழுதிருக்கிறார். எனக்குத் தெரிந்து, காரைக்காலம்மையார் கணவரைப் பிரிந்ததற்காக அழுத ஒரே மனிதர் இவர்தான். ஒரு நாள் இலங்கை வானொலியில் எம். எஸ். சுப்புலட்சுமியின் பாடலொன்று ஒலிபரப்பானது. ஒரு விருத்தத்தை இராக மாளிகையில் பாடி உருக்கினார் எம்.எஸ். பாடலின் கடைசி வரி கண்ணீர் வருவிக்க, பதிவு செய்த பாடலை பின் ஒருநாள், வித்துவானுக்கு போட்டுக் காட்டி, 'சேர் இது யார் கவிதை?' என்று கேட்டேன். 'திருப்பிப் போடு பார்க்கலாம்' என்றார். முதல் வரி கேட்டார். பாடலை இனங்காணாதது அவர் முகக் குறிப்பில் புரிந்தது. இரண்டாம் வரி, மூன்றாம் வரியிலும் அதே முகக் குறிப்பு. நான்காம் வரி தொடங்க, திடீரென, முகக்குறிப்பில் மாற்றம். காரைக்காலம்மையாரின் பாடல் அது என இனங்கண்டு விட்டார். அது ஒரு மார்கழி மாத காலைப் பொழுது. அம்மையின் பாடல் என்று தெரிந்த மறுகணமே அவர் முகம் அஷ்டகோணலாய் மாறியது. தலையில் கைவைத்துக் கும்பிட்டார். 'டேய் தம்பீ! இது எங்கட அம்மாட பாட்டடா', என்ற மறுகணம் குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினார். இவை அம்மையார் மேல் அவர் கொண்ட பற்றுதலுக்குச் சான்றான சம்பவங்கள். அம்மையார் பற்றி என் குருநாதரின் பேச்சுத் தொடங்கியது.பத்து நிமிடத்துக்குள் சபை தன்னை மறந்தது. காரைக்காலம்மையார் எங்களோடு வாழத் தொடங்கினார். சபை ஸ்தம்பித்தது. திடீரென வித்துவானின் நினைப்பு வர, காரைக்காலம்மையார் மேல், அவர் கொண்ட பற்றைத் தெரிந்து, அவர் இருக்கும் திசை பார்த்தேன். விழுந்து உருளாத குறையாக விம்மி விம்மி அழுகிறார். ம(f)ப்ளரால் கண்ணைத் துடைப்பதும், பேச்சுக்கேற்ப முகபாவங்களை மாற்றுவதுமாக, மெய்மறந்து நின்றார். பேச்சு முடிந்தது. கற்றார் பலர் பேராசியருக்குக் கை கொடுக்கப்போயினர். வேறு சிலர் கைபிடித்து வணங்கினர். இன்னும் சிலர் தாமும் அம்மையைப் படித்ததை, பேராசிரியரைப் பாராட்டுவது போல் வெளிப்படுத்தினர். கூட்டத்தை விலக்கி விம்மியபடி உள் நுழைந்தார் வித்துவான். ம(f)ப்ளரை எடுத்து இடுப்பிற் கட்டினார். கண்ணீர் சோர நெடுமரமாய் பேராசிரியர் காலில் விழுந்தார். கூடியிருந்த கற்றோர் திகைத்துப் போயினர். பேராசிரியர் பதறினார். அழுது முடிந்து வெளியே வந்த வித்துவானை சில 'பட்ட' மரங்கள் பரிகசித்தன. உங்கட படிப்பென்ன? அறிவென்ன? வயசென்ன? அவற்றை காலில நீங்கள் போய் விழுறியள், 'உங்களுக்கு விசரே' அவ் 'வற்றல் மரங்களின்' வம்பு கேட்டு, துளியும் ஆணவப்படா மல், 'அம்மாவ என்ர கண்ணில காட்டிப் போட்டாரடா கும்பிடாம எப்படி இருக்கிறது?' என்றபடி மீண்டும் அழத்தொடங்கினார். அன்பால் அறிவைக் கடந்த, அவ் அற்புதர்.

★ ★ ★

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# போர்க்குற்றங்களை நிராகரிக்கும் நிலைப்பாட்டை இந்த முறையும் ஜெனீவாவில் தெரிவிப்போம்!

கொழும்பு, மார்ச் 02

போர்க்குற்றங்களை நிராகரிக்கும் எமது நிலைப்பாட்டை இம்முறையும் ஜெனிவாவில் தெரிவிப்போம் என எலிய அமைப்பின் பிரதிநிதியாக ஜெனிவா செல்லவுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர எலிய அமைப்பின் பிரதிநிதியாக ஜெனிவா செல்லவுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம்முறையும் எலிய சார்பில் நான் ஜெனீவா பயணமாகின்றேன். எதிர்வரும் 16 ஆம் திகதி பயணமாக நினைத்துள்ளேன். இம்முறையும் நாங்கள் எமது நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவிக்க வேண்டும்.

ஏனெனில், இந்த அரசு ஆட்சிக்கு வந்த வுடனேயே இலங்கையை சர்வதேச தரப் பிடம் அடிபணிய வைத்து விட்டது. கடந்த 2015 ஆம் ஆண்டு ஜெனீவா கூட்டத் தொடரின் போது இலங்கையை புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும், காணாமல் போனோர் காரியாலயம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதிகளைக் கொடுத்தும் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரிக்கப்படுவதாக வாக்குறுதி வழங்கியும் எமது இராணுவத்தைத் தண்டிக்கும் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து விட்டது.



முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

ஆகவே இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத வரையில் சர்வதேசம் தொடர்ச்சியாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து அதன் மூலமாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எவ்வாறிருப்பினும் நாம் தொடர்ச்சியாக எமது இராணு வத்தை காப்பாற்றும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றோம். இம்முறையும் நாம் இலங்கை இராணுவத்தைக் காப்பாற்றும் வகையில் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

ஜெனீவாவில் எமது கரங்களை பலப்படுத்தும் தரப்பைச் சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம். சர்வதேச சிங்கள அமைப்புகள், சிங்கள மக்களைச் சந்தித்தும் எமக்கு ஆதரவான நகர்வுகளை முன்னெடுக்க அழுத்தம் கொடுப்போம்.

எமது இராணுவத்தை தண்டிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுக்க இடமளிக்கமாட்டோம். அதற்கான குரலாகவே நாம் ஜெனிவாவில் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றோம்.

இந்த அரசு முன்னெடுத்த தேசத் துரோக செயற்பாட்டை நாம் சாதாரணமாக விடப் போவதில்லை. எமது ஆட்சியில் இவர்கள் அனைவரையும் கண்டிப்பாகதண்டிப்போம். இன்று இராணுவத்தை குறை கூறும் நபர்கள், சர்வதேச நாடுகளில் இருந்துகொண்டு புலிகளை ஆதரிக்கும் நபர்கள் இலங்கையை பழிதீர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும், பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கையில் இலங்கையின் தேசியக் கொடியை தரையில் வீசி கால்களால் மிதித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இவை அனைத்துமே இலங்கையில் ஒற்றுமையாக வாழும் தமிழ் – சிங்கள மக்கள் மத்தியிலேயே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முட்கொம்பன் - கண்ணகைபுரம் இணைப்பு வீதி புனரமைப்பு!



கொழும்பு, மார்ச் 02

கிளிநொச்சி, முட்கொம்பன் மற்றும் கண்ணகைபுரம் பகுதிகளுக்கான இணைப்பு வீதி ஸ்கந்தபுரம் சனசமூக நிலையைத் தால் 16 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப் பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற கிளிநொச்சி, கண்ணகைபுரம் கிராமத்தில் வாழும் மக்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், இந்தப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்காகவும் முட்கொம்பன் பகுதிக்குச் செல்கின்றனர்.

இந்த நிலையில், இரண்டு கிராமங்களுக்கும் இடையில் மிகக்குறுகிய இடைவெளிகொண்ட வீதியொன்று காணப் படுவதாகவும் அதைப் புனரமைத்துத் தருமாறும் இரு கிராம மக்களும் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இதனையடுத்து, ஸ்கந்தபுரம் சனசமூக நிலையம் 2018ஆம் ஆண்டில் குறித்த வீதியைப் புனரமைத்துத்தருமாறு கரைச்சிப்பிரதேச சபையிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதனையடுத்து, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரனின் ஏற்பாட்டில் 16 லட்சம் செலவில் இந்த இணைப்பு வீதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீதியைப் புனரமைக்கின்ற போது இவ்விரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தமது போக்குவரத்துக்களை இலகுவாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# தனது ஊடகப் பிரிவை சுத்தப்படுத்துகிறார் ஜனாதிபதி



கொழும்பு, மார்ச் 02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஊடகப்பிரிவினைச்சுத்தப் படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார் என தெரியவருகிறது.

ஜனாதிபதியின் மேலதிகசெயலாளராக(ஊடகம்) பதவிவகித்தநிமல்போபகே அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து ஊடகப் பிரிவின் ஆலோசகராகபணியாற்றியசிரேஷ்ட ஊடகவியலாளர்லலித்டிசில்வாபதவியில்இருந்து நீக்கப் பட்டார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட எந்த பணிகளும் ஜனாதிபதிஊடகப்பிரிவில்இல்லை அதனால் அங்கு இருப்பதில் பயனில்லை எனக் கூறிலலித்டிசில்வா, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்என்றும் அதற்குஅமையவேஅவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

லலித் டி சில்வா நுகேகொடையில்உள்ளஹோட்டல் பாடசாலை ஒன்றின் உரிமையாளராவார்.

மேலும் ஜனாதிபதி ஊடகப்பிரிவில் புகைப்பட பிரிவு சம்மந்தமாகவும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதில் பணிபுரியும் புகைப்பட ஊடகவியலாளர்கள் சம்மந்தமாக முஸ்லிம் அமைச்சர் ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்து ஜனாதிபதி புகைப்பட பிரிவு குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

போபகே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் (ஊடகம்) பதவியில் இருந்து நீக்கப்பட்டமையை அடுத்து, அந்த பதவிக்கு சரத் சந்திரசிறி என்ற அரச அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

# விபசார விடுதி சுற்றிவளைப்பு; தாய்லாந்துப் பெண்கள் கைது!

## கண்டியில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 02

கண்டியில் அழகுக் கலை நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்டு வந்த விபசார விடுதி ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது தாய்லாந்துப் பெண்கள் இருவர் மற்றும் இலங்கை பெண்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

இந்த நிலையத்தின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுபவர்கள் கண்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளின் கோடீஸ்வரர்கள் என தெரியவந்துள்ளது.

நீண்டகாலமாக அழகுக் கலை மற்றும் மசாஜ் நிலையமாக நடத்தி செல்லப்படும் வீடு தொடர்பில் கிடைத்த தகவல்களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொலிஸார் செயற்பட்டு வருகின்றனர். (க)

# கணக்காய்வு சட்டமூலத்திற்கு அங்கீகாரம்!

கணக்காய்வு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் இது அங்கீகரிக்கப்பட்டது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில் –

முன்மொழியப்பட்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தை மேலும் திருத்தம் செய்வதற்காக வேண்டி சிபார்சுகள் முன்வைப்பதற்காக கலாநிதி சரத் அமுனுகம அமைச்சரின் தலைமையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவால் முன்வைக்கப்பட்ட சிபார்சு அமைச்சரவையின் கவனத்திற் கொள்ளப்பட்டதோடு, சிபார்சுகளில் முன் மொழியப்பட்டுள்ள திருத்தங்களை உள்ளடக்குவதன் அடிப்படையில், தேசிய கணக்காய்வுசட்டமூலத்துக்குஅங்கீகாரத்தை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்ததுஎனஅமைச்சரவைத்துணைப்பேச்சாளர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டன் எம்.பியுடன் நாமல் சந்திப்பு



பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரான லோட் நஸ்பியை நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் லண்டனில் இடம்பெற்று வருகின்றது.

இதில் பங்கேற்றுள்ளபோது, இவர்கள் இருவருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அவர் எப்போதும் இலங்கையின் உண்மையான நண்பன் என்றும், முக்கியமான தருணங்களில் அவர் இலங்கைக்கு ஆதரவாக இருந்தார்' என்றும் நாமல் ராஜபக்ஷ தமது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வினாத்தாள் 17 பகுதி II இன் தொடர்ச்சி...

9. இரண்டு பூசணிக்காய்களின் மொத்தநிறை 14kg 700g ஆகும். ஒன்றின் நிறை 6kg 900g ஆகும். எனின் மற்றைய பூசணிக்காயின் நிறையைக் காண்க.

.....................................................................................................................................

10. 


இரண்டு பென்சில்களினதும் மொத்த நீளம் யாது? ..............................................................


11. 

கடிகார முகம் காட்டும் நேரம் பிற்பகல் நேரமாகும். இதனை நியம நேரத்தில் தருக.

..........................................................


12. பழங்கள் 8 வீதம் உள்ள 3 பெட்டிகளும் பழங்கள் 6 வீதம் உள்ள 5 பெட்டிகளும் உள்ளன. 8 பெட்டிகளிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை?

..........................................................

13. 


பாத்திரம் A யை நிரப்புவதற்கு பாத்திரம் B இனால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

..........................................................

14. 


இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

..........................................................


15. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | மஹாவெவ | 60km |
| நீர்கொழும்பு | மஹாவெவ | 25km |
| நீர்கொழும்பு | சிலாபம் | 41km |
| கொழும்பு | சிலாபம் | ....................... |

(15 x 2 = 30 புள்ளிகள்)

16.1. விதையொன்று முளைத்து வளரும் முறை தொடர்பான சரியான ஒழுங்கைக் கொண்ட விடை எது?




1. BDCA 2. BCAD 3. BCDA 4. ACAD







# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் வினாத்தாள் 17

பகுதி – II நேரம்– 1 மணித்தியாலம் 15 நிமிடம்

வினாத்தாள் 17 பகுதி II இன் தொடர்ச்சி...

**04. சரியான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடத்தை நிரப்புக.**

1. அம்மா திருமணத்திற்கு .............................................. சேலை வாங்கினார். (கூரைச், கூறைச்)
2. தம்பி மாடிப்படியில் இருந்து .............................................. வந்தான். (இறங்கி, இரங்கி)

(1 x 2 = 2 புள்ளிகள்)

**05. பின்வரும் பாடலில் விடுபட்ட பகுதியைப் பூர்த்தி செய்க.**

நூலகம் என்பது தேன்கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன்துளிகள்!

..........................................................

நூறாயிரமாம் நன்மலர்கள்! (2 புள்ளிகள்)

**06. வேறுபட்ட சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.**

1. இன்னல், இன்பம், உவகை
2. வனம், ஆகாயம், காடு

(1 x 2 = 2 புள்ளிகள்)

**07. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

1. பாபுவும் / ஒரே / கிராமத்தில் / பிரபுவும் / வாழ்ந்தவர்கள்

.....................................................................................................................................

2. ஆண்டு / தசரத மன்னன் / நாட்டை / வந்தான் / கோசல

.....................................................................................................................................

(2 x 2 = 4 புள்ளிகள்)

08. “எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்..........”

இப் பாடலைப் பாடியவர் யார்? .............................................. (1 புள்ளிகள்)

**09. பின்வரும் வாக்கியங்களைத் திருத்தி எழுத்து வடிவில் எழுதுக.**

1. இண்டைக்குத் திருவிழா. ................................................................................................
2. கனக்க ஆக்கள் வருவினம். ................................................................................................

(2 x 2 = 4 புள்ளிகள்)

**10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ் கருத்தை எழுதுக.**

1. றோஹல : ......................................................................
2. பரி (G) கண(க்) க காமரய : ...................................................................... (2 x 1 = 2 புள்ளிகள்)

**11. பின்வரும் சிங்கள வசனத்தின் தமிழ் கருத்தை தமிழில் எழுதுக.**

1. அ (ம்) (B) ப ரஸய் : ...................................................................................... (1 புள்ளிகள்)

**12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. Toilet : ......................................................................
2. Chalk : ...................................................................... (2 x 1 = 2 புள்ளிகள்)

**13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. God bless you : ...................................................................... (1 புள்ளி)

14. இன்று நவீன உலகில் நாம் தகவல்களை அறிந்து கொள்வதில் முக்கிய இடம் வகிப்பது தொலைக்காட்சி ஆகும். "தொலைக்காட்சியின் பயன்கள்" என்னும் தலைப்பில் எழுவாய், பயனிலை திருத்தமாக அமையக்கூடியவாறு ஐந்து சொற்களுக்குக் குறையாத 3 வாக்கியம் எழுதுக.

1. ................................................................................................
................................................................................................
2. ................................................................................................
................................................................................................
3. ................................................................................................
................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)


14





**15. பின்வரும் எண்குறியின் பெயரை எழுத்தில் எழுதுக.**

1. 30 049 ................................................................................................


2. 

i. உருவில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்குறியில் எழுதுக.

................................................................................

ii. பன்னிரண்டினை உரோமன் எண்குறியில் அமைக்கத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை?

................................................................................................

3. 

I. தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.

ii. நிழற்றாமல் எஞ்சியுள்ள பகுதியை தசம எண்ணில் தருக.

................................................

4. 2, 4, 6, 8 என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரே எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்)


1. 4 + ................ + ................ = 18

5. பின்வரும் எண்ணிற்கு முன்னால், பின்னால் வரும் எண்களை வெற்றிடத்தில் எழுதுக.

.........................., 40 000, ..........................

6. தருண் 5m 45cm நீளமுள்ள நாடாவும், விஸ்ணு 8m, 97cm நீளமுள்ள நாடாவும் வைத்திருந்தனர். இருவரிடமும் உள்ள நாடாக்களின் மொத்த நீளம் யாது?

......................................................................

7. 

I. உருவிலுள்ள திண்ம உருவின் பெயர் யாது? ..................................................

ii. இத்திண்ம உருவிலுள்ள ஓரங்களின் எண்ணிக்கை யாது? ..................................................

8. மு.ப 7.10 இற்குப் பாடசாலைக்கு வந்த சாளினி பிற்பகல் 2.05 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள். சாளினி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தாள்?

................................................................................................

# சவுதி அரேபியாவில் இராணுவத்திலும் பெண்கள்



## பட்டத்து இளவரசர் சல்மான் மேலும் அதிரடி

ஜெட்டா,மார்ச் 02

சவுதி அரேபியாவில் பெண்களுக்குப் படிப்படியாகப் பல்வேறு உரிமைகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், இராணுவத்தில் முதன்முறையாகப் பெண் பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் சல்மான் தலைமை பொறுப்புக்கு வந்த பின்னர், அரசு கடைப்பிடித்து வந்த பல பழைமைவாத நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்தினார். பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமை, உதைபந்து உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளை மைதானத்தில் சென்று காணும் உரிமைகள் அமுல் படுத்தப்பட்டன.

மேலும் அரசின் முக்கிய பதவிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில், முதன்முறையாக இராணுவத்தில் பெண்கள் இணைவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இராணுவத்தில் 12 பணியிடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், வரும் வியாழன் வரை இதற்காக விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரியாத், மெக்கா, அல் காசிம் மற்றும் மெதீனா ஆகிய மாகாணங்களில் வசிக்கும் 25 முதல் 35 வயதுக்குள்ளான பெண்கள் இந்தப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

குறைந்த பட்சம் டிப்ளோமா படிப்பும், கணவர் அல்லது சகோதரர்கள் மேற்கண்ட மாகாணத்தில் பணி புரிய வேண்டும் போன்ற தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (ப)

# 'N' எழுத்திற்கு தடை சீனா!

பீஜிங்,மார்ச் 02

சீனாவில் ஆங்கிலம், மண்டரின் ஆகிய இரு மொழிகளிலும் என் (N) என்ற எழுத்தைப் பயன்படுத்த அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

என் (N) என்ற எழுத்து வரும் எந்த வார்த்தையும் பயன்படுத்தக் கூடாது என அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மட்டுமல்லாது, சீன மொழியான மாண்டரினிலும் என் (N) என்ற எழுத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், சீன இணையதளங்களில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் பல வார்த்தைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தடை இன்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. அரசுக்கு எதிராக எந்தக் கருத்தும் எழக்கூடாது என்ற நோக்கத்தில் இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தடை மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு முற்றிலும் எதிரானது எனக் கூறப்படுகிறது. சீன அதிபர் சீ ஜின்பிங் பெயரில் என் (N) என்ற எழுத்து இரண்டு முறை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எகிப்தில் ரயில் பெட்டிகள் கழன்று சரக்கு ரயிலுடன் மோதி விபத்து

## பயணிகள் பத்துப் பேர் உயிரிழப்பு

கெய்ரே,மார்ச் 02

எகிப்து நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள பெஹேய்ரா மாகாணத்தில் பயணிகள் ரயிலில் இருந்த இரண்டு பெட்டிகள் தனியே கழன்று பக்கத்து தண்டவாளத்தில் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியதில் 10 பயணிகள் உயிரிழந்தனர் என அந்நாட்டுச் சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டில் உள்ள ரயில் போக்குவரத்தில் எப்போதுமே பாதுகாப்பு நடைமுறைகள் சரியாகக் கடைபிடிக்கப்படுகின்றமை இல்லை எனப் பயணிகள் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர்.



கடந்த ஆண்டு இதே போன்ற ரயில் விபத்து ஒன்றில் 42 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (ப)

# அமெ. அதிபர் தேர்தலில் மீண்டும் ட்ரம்ப் போட்டி



வருகிற 2020ஆம் ஆண்டில் நடைபெறும் அதிபர் தேர்தலுக்கான பணியை டொனால்ட் ட்ரம்ப் தொடங்கி விட்டார். அதற்கு முன்னோடியாக இப்போதே பிராட் பார்சேல் என்பவரை பிரசார மேலாளராக நியமித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்தது. அதில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ட்ரம்ப் வெற்றி பெற்று அதிபரானார். அவர் பதவி ஏற்று ஓர் ஆண்டு காலம் மட்டுமே தற்போது நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் அடுத்ததாக வருகிற 2020ஆம் ஆண்டில் நடைபெறும் அதிபர் தேர்தலுக்கான பணியைத் தொடங்கி விட்டார்.

அதற்கு முன்னோடியாக இப்போதே பிராட் பார்சேல் (42) என்பவரை பிரசார மேலாளராக நியமித்துள்ளார். இவர் டிஜிட்டல் நிபுணர் ஆவார். கடந்த 2016ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் இவரே ட்ரம்பின் பிரசார மேலாளராக இருந்தார்.

தற்போது பிரசார மேலாளராக பிராட் நியமிக்கப்பட்டதன் மூலம் வருகிற 2020ஆம் ஆண்டில் நடைபெறும் அதிபர் தேர்தலில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

# ட்ரம்ப் மருமகனின் அந்தஸ்து குறைப்பு



வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மருமகன் ஜேரட் குஷ்னரின் அந்தஸ்து திடீரென குறைக்கப்பட்டுள்ளது. அதற்கான குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மருமகன் ஜேரட் குஷ்னர் (வயது 37). இவர்,ட்ரம்பின் மகள் இவான்கா ட்ரம்பின் கணவர் ஆவார். ஜேரட் குஷ்னர், மத்திய கிழக்கு நாடுகளின் சமாதான நடைமுறைகளைக் கவனித்து வருகிறார்.

இதுவரை உயர்மட்ட அளவிலான இரகசிய அறிக்கைகள் அவரது பார்வைக்கு அளிக்கப்பட்டு வந்தன. இப்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. அவரது பின்னணி பற்றிய பரிசோதனைகள் இன்னும் முடிவு பெறாததே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

ஜேரட் குஷ்னரின் அந்தஸ்து குறைக்கப்பட்டாலும்கூட, ட்ரம்ப் நினைத்தால் அமெரிக்க ஜனாதிபதிக்கு உரித்தான சிறப்பு அதிகாரத்தைக் கொண்டு அவர் தகுதியானது எனக் கருதுகிற எந்த ஒரு இரகசியத்தையும் அவருடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

# இரசாயனக் குண்டு தயாரிக்க சிரியாவுக்கு மூலப்பொருள் வழங்குகின்றது வடகொரியா

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.நா.



டமாஸ்கஸ்,மார்ச் 02

இரசாயனக் குண்டு தயாரிக்க பயன்படும் மூலப்பொருள்களைச் சிரியாவுக்கு வடகொரியா வழங்கியுள்ளது என ஐ.நா. குற்றம்சாட்டியுள்ளது.

சிரியாவில் கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கும் டமாஸ்கஸின் புறநகரான கவுட்டாவை மீட்க சிரிய இராணுவம் கடந்த 8 நாள்களாக அதிரடி குண்டுவீச்சு நடத்தியது.

ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து சிரியா நடத்திய குண்டுவீச்சில் 200இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 556 பேர் கொல்லப்பட்டனர். இரசாயனக் குண்டுகள் வீசிப் பலரைக் கொன்று குவித்தனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

ஆனால், அதை சிரியாவும் ரஷ்யாவும் மறுத்துள்ளன. கவுட்டாவில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு தொடர்ந்து குண்டுவீச்சு நடந்து வருகிறது.

இதற்கிடையே இரசாயனக் குண்டு தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்களை சிரியாவுக்கு வடகொரியா வழங்கியுள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

குளோரின் குண்டு தயாரிக்கும் போது அசிட்டின் தாக்கத்தைத் தாங்கும் வகையில் கட்டடம் அமைப்ப பலம் வாய்ந்த செங்கற்கள், வால்வுகள், குழாய்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டன. மேலும் இரசாயனக் குண்டு எனப்படும் குளோரின் குண்டு தயாரிக்கும் தொழில்நுட்பத்தை வடகொரியாவின் ஏவுகணை நிபுணர்கள் நேரில் சென்று வழங்கியுள்ளனர்.

இவை சீன வர்த்தக நிறுவனம் மூலம் சட்ட விரோதமாக 2016 மற்றும் 2017ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பலதடவைகள் கப்பல்களில் அனுப்பப்பட்டுள்ளன. இவை தவிர பல ஆண்டுகளாக இரசாயனக் குண்டு தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தகவல் ஐ.நா.சபையின் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# எனது தந்தையை குறி வைத்தே என்னைக் கைது செய்துள்ளனர்

புதுடில்லி,மார்ச் 02
எனது தந்தையைக் குறி வைத்தே என்னைக் கைது செய்துள்ளனர் என்று கார்த்தி சிதம்பரம் கூறியுள்ளார்.

கார்த்தி சிதம்பரம் கைது செய்யப்பட்டமைக்கு சட்டவிரோத பண பரிமாற்றமே காரணம் என்று சி.பி.ஐ. கூறியுள்ளது. என்றாலும் அதை உறுதிப்படுத்தும் வகையில் ஐ.என்.எக்ஸ். மீடியா நிறுவனத்தின் உரிமையாளர் இந்திராணி முகர்ஜி கொடுத்துள்ள வாக்கு மூலம் தான் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய அரசு அரசியல் ரீதியாக பழிவாங்கும் நடவடிக்கையாக என்னை கைது செய்துள்ளது. சி.பி.ஐ. அதிகாரி கள் என் மீது சுமத்தும் குற்றச்சாட் டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரம் இல்லாதவை. வேண் டும் என்றே என்னை இந்தவழக்கில்சிக்கிவைத்துள்ளனர்.

எனது தந்தையை மத்திய அரசு குறி வைத்துள்ளது. அதற்காகத்தான் இந்த ஒட்டு மொத்த நடவடிக்கையும் என்னைவைத்து எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நான் நிரபராதி என்பதை நீதி மன்றில் நிரூபிப்பேன் என்று தெரிவித்துள்ளார்.



சீறுகிறார் கார்த்தி சிதம்பரம்

## ரஜனி கட்சி தொடங்க பா.ஜ.க. அழுத்தம்

### இளங்கோவன் கூறுகிறார்

ரஜனி கட்சி தொடங்க பா.ஜனதா அழுத்தம் கொடுக்கிறது என்று ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கில் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் பெற்று வரும் வெற்றி, மக்கள் மோடியை தூக்கி எறிய தயாராகிவிட்டார்கள் என்பதைக் காட்டுகின்றது. மத்தியில் ராகுல் பிரதமர் ஆகின்றமையும் தமிழகத்தில் ஸ்டாலின் முதல்வர் ஆகின்றமையும் உறுதி.



ஆன்மீக அரசியல் என்று ரஜனி பூச்சாண்டி காட்டுகிறார். 30 வருடங்களுக்கு முன்பு செய்ய வேண்டியதை இப்போது செய்கிறார். இவர்கள் மக்களுக்கு என்ன செய்வார்கள்? தமிழக மக்கள் மீது கொண்ட அக்கறை காரணமா? இல்லை தமிழகத்தை முன்னேற்ற வேண்டிய லட்சியமா? எதுவும் கிடையாது. கையில் இருக்கிற படங்கள் நன்றாக ஓட வேண்டும். மனைவி செய்த தவறுக்கு தீர்வு காண வேண்டும். அவ்வளவுதான்.

பா.ஜனதா கொடுக்கும் அழுத்தத்தால் இப்படியெல்லாம் பேசுகிறார். அவர் வருவதும் தெரியாது. போவதும் தெரியாது. நிச்சயமாக அரசியல் கட்சி தொடங்கவே மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

# அயோத்தி விவகாரம்: விரைவில் நல்ல முடிவு

லக்னோ,மார்ச் 02
அயோத்தி ராமர் கோயில் விவகாரத்தில் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் நல்ல பதில்களைப் பெற்று வருகிறேன். விரைவில் நல்ல முடிவு கிடைக்கப்பெறும் என்று ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் கூறியுள்ளார்.

அயோத்தியில் பல ஆண்டுகளுக்கும் மேலாக ராமர் கோயில் -பாபர் மசூதி பிரச்சினை தொடர்ந்து வருகிறது. இது தொடர்பான வழக்கில் சர்ச்சைக்குரிய இடம் மூன்று தரப்பினருக்கு சொந்தமானது என அலகாபாத் உயர் நீதிமன்றம் கடந்த 2010இல் தீர்ப்பளித்தது.

இங்கு கோயில் கட்டுவதற்கு சில நிபந்தனைகளையும் விதித்தது. இதன் மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் இறுதி நிலையை எட்டியுள்ளது. இந்த நிலையில், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அயோத்தி விவகாரத்தில் இரு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார்.




ஸ்ரீஸ்ரீரவிசங்கர் நம்பிக்கை

இந்த நிலையில், ராமர் கோயில் விவகாரம் தொடர்பாக ஒவ்வொரு பகுதியில் இருந்தும் நல்ல பதில்களைப் பெற்றுக்கொண்டு வருகிறேன். ராமர் கோயில் கட்டு வது தொடர்பாக இரு சமூகத்தினரிடையே இணக்கமான ஒற்றுமையைப் பற்றிப் பேசி வருகிறோம். இஸ்லாம் சமூகத்தினரிடம் இருந்து நல்லுறவுகளும் ஒத்துழைப்பும் கிடைக்கின்றன. விரைவில் நல்ல முடிவு ஒன்று கிடைக்கப் பெறும் என்று தெரிவித்துள்ளார். (ப)



பிரம்மாண்ட ஊர்தியில் ஸ்ரீதேவியின் இறுதி ஊர்வலம்! ஆயிரக் கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் உடல் தகனம்

## ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளி ரவிச்சந்திரனுக்கு தற்காலிக விடுப்பு

மதுரை,மார்ச் 02
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள ரவிச்சந்திரனுக்கு 2 வாரங்கள் தற்காலிக விடுப்பு (பரோல்) அளித்து மதுரை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக மதுரை மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வருபவர் ரவிச்சந்திரன். இந்த 25 ஆண்டுகள் சிறை வாசத்திற்கு இடையே அவருக்கு 3 முறைகள் தற்காலிக விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, குடும்ப சொத்து பாகப்பிரிவினைக்காகவும், தனது தாயாரைப் பார்க்கவும் ஒரு மாதம் பரோல் கேட்டு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அவர் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நடந்து வந்தது.



இந்த மனு மீது நேற்றும் விசாரணை நடைபெற்றது. வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்ததும், ரவிச்சந்திரனுக்கு 2 வார காலம் தற்காலிக விடுப்பு அளித்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## மத்தியப் பிரதேசத்தின் இரு சட்டசபை இடைத்தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றி

போபால்,மார்ச்02
மத்தியப் பிரதேச மாநிலத்தில் மங்காவுலி மற்றும் கொலாரஸ் சட்டசபை இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மத்தியப் பிரதேசம் மாநிலத்தின் மங்காவுலி மற்றும் கொலாரஸ் சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. மங்காவுலி தொகுதி இடைத்தேர்தலில் 22 பேரும், கொலாரஸ் தொகுதி இடைத்தேர்தலில் 13 பேரும் போட்டியிட்டனர். இத்தேர்தல்களில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

கொலாரஸ் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் மகேந்திர சிங் யாதவ் 82 ஆயிரத்து 515 வாக்குகளும், பா.ஜ.க. வேட்பாளர் தேவேந்திரகுமார் ஜெயின் 74 ஆயிரத்து 432 வாக்குகளும் பெற்றனர். இதன்மூலம் 8 ஆயிரத்து 83 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றார்.

மங்காவுலி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் பிரஜேந்திர சிங் யாதவ் 70ஆயிரத்து 808 வாக்குகளும், பா.ஜ.க. வேட்பாளர் பாய்சஹாப் யாதவ் 68 ஆயிரத்து 684 வாக்குகளும் பெற்றனர். இதன் மூலம் 2 ஆயிரத்து 124 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றார்.

இதனால் மத்தியப் பிரதேச மாநிலத்தில் இரு சட்டசபைகளையும் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.



# மீண்டும் மலிங்க அவுட்!



இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு நிதஹஸ் கிண்ண ரி-20 தொடருக்கான இலங்கை அணியில் மலிங்க சேர்க்கப்பட வில்லை.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் அணிகள் பங்குபெறும் முத்தொடர் வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அணியில் இடம் பெறுவார் என எதிர்ப்பார்க்கப்பட்ட மலிங்க மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

திறமையை வெளிக்காட்டாமை மற்றும் உடற்தகுதி பிரச்சினையால் தவித்து வந்த மலிங்க கடந்த 24 ஆம் திகதி தொடங்கிய உள்ளூர் ரி-20 கிரிக்கெட் தொடரில் என்.சி.சி அணிக்காக சிறப்பாக விளையாடி வருகிறார்.

மூன்று போட்டிகளில் பத்து விக்கெட்களை வீழ்த்தி அவர் அசத்தியிருந்த நிலையில் சர்வதேச அணியில் சேர்க்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை.

சமீபத்தில் பேட்டியளித்த இலங்கை அணி தெரிவுக் குழுத் தலைவர் கிரஹாம் லாப்ரோரி, மலிங்கவுக்கான கதவு இன்னும் மூடப்படவில்லை, தொடர்ந்து அவர் உள்ளூர் போட்டியில் சாதித்தால் 2019 உலக கிண்ண அணியில் அவரை சேர்ப்பது தொடர்பாகப் பரிசீலிப்போம் எனக் கூறியயமை குறிப்பிடத்தக்கது.

## 2019ஆம் ஆண்டின் பிறகே ஓய்வு குறித்து முடிவு




2019ஆம் ஆண்டுக்கு பிறகே ஓய்வு தொடர்பாக முடிவு எடுப்பேன் என்று இந்திய கிரிக்கெட் அணி வீரர் யுவராஜ்சிங் கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் அணி முன்னணிவீரான யுவராஜ்சிங் அணியில் மீண்டும் இடம் பிடிக்க போராடி வருகிறார்.

கடைசியாக அவர் கடந்த ஆண்டு ஜுன் மாதம் சம்பியன்ஸ் டிராபி போட்டியில் விளையாடினார். அதன்பின் கழற்றி விடப்பட்ட யுவராஜ்சிங்கை தேர்வுக் குழுவினர் கண்டு கொள்ளவில்லை. ஆனாலும் அணிக்குத் தேர்வாக வேண்டுமென கடும் பயிற்சி மேற்கொண்டு வருகிறார்.

ஏப்ரல் மாதம் நடக்கும் ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற இலக்கை வைத்துள்ளார்.இது தொடர்பாக யுவராஜ் சிங் கூறியவை வருமாறு:-

ஐ.பி.எல். போட்டித் தொடரை ஆவலுடன் எதிர் நோக்கி இருக்கின்றேன். இது எனக்கு மிகவும் முக்கியமானது. 2019 ஆம் ஆண்டு வரை விளையாட விரும்புகிறேன். அதன் பிறகு ஓய்வு குறித்து முடிவு எடுப்பேன். தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணி சிறப்பாக விளையாடியது. டெஸ்ட் தொடரை இழந்த பிறகும் இந்திய வீரர்கள் போராட்டக் குணத்தை வெளிப்படுத்தினர். கடுமையாகப் போராடியே டெஸ்ட் தொடரை இழந்தது. கப்டனாக விராட்ஹோக்லி அதிக ஓட்டங்கள் குவித்து சிறப்பாக வழிநடத்தினார் என்று தெரிவித்துள்ளார். (பு)

## முத்தரப்பு தொடர்:
# இலங்கை அணி அறிவிப்பு




இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் பங்கு பெறும் முத்தரப்பு ரி-20 தொடர் (Hero Nidahas Trophy 2018) வரும் 6 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இத்தொடருக்கான 20 பேர் கொண்ட இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் மத்தியூஸ் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் காயம் இன்னும் முழுமையாகக் குணமடையாத காரணத்தால், தொடரிலிருந்து விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 20 பேர் கொண்ட இலங்கை அணியில் 15 பேர் கொண்ட இறுதியான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தது.

அதன்படி இறுதியான 15 பேர் கொண்ட இலங்கை அணியை, இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது..

இதில் விக்கெட் காப்பாளரான நிரோசன் டிக்வெல்லா ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடினாலும், ரி-20 தொடரில் அவரின் செயற்பாடு திருப்தியாக இல்லாத காரணத்தினால் அவருக்கு முத்தரப்பு தொடருக்கான அணியில் இடமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை குழாம்- தினேஷ் சந்திமல் (அணித்தலைவர்), சுரங்க லக்மல் (உப தலைவர்), உப்புல்தரங்க, தனுஷ்க குணதிலக, தனஞ்சய டி சில்வா, குஷல் மெண்டிஸ், தசுன் சானக்க, குஷல் பெரேரா, திசர பெரேரா, ஜீவன் மெண்டிஸ், இசுரு உதான, அகில தனஞ்செய, அமில அபொன்சோ, நுவான் பிரதீப், துஷ்மந்த சமீர (ப)

# உதைபந்தில் கால் பதிக்கும் உசைன்போல்ட்

சர்வதேச ஓட்டப்பந்தயப் போட்டிகளின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த உசைன் போல்ட், உதைபந்தாட்ட அணி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

ஜமைக்கா நாட்டைச் சேர்ந்தவரான 31 வயதாகும் உசைன் போல்ட் ஒலிம்பிக் விளையாட்டில் 100 மீற்றர், 200 மீற்றர், 4X100 மீற்றர் போன்ற பிரிவுகளில் பதக்கம் பல வென்று உலக சாதனைகளைப் படைத்தவர்.

ஓட்டப்பந்தயப் போட்டிகளில் இருந்து கடந்த 2017 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். தற்போது உதைபந்தாட்ட அணியுடன் ஒப்பந்தம் செய்துள்ள உனசன் போல்ட், தான் எந்த அணியுடன் ஒப்பந்தம் செய்துள்ளேன் என்பது பற்றி அறிவிப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

உதைபந்தாட்ட ஜாம்பவான் அணிகளான மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் புதிய மேஜர் லீக் சோக்கர் ஆகிய அணிகளில் இணைய உசைன் போல்ட் அதிக ஆர்வத்தோடு உள்ளார் என அவரே தெரிவித்திருக்கிறார்.

இதுவரை உசைன் போல்ட்க்கு 12 முறை உதைபந்தாட்ட அணியில் இணைவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டும் தற்போதுதான் இணைவது தொடர்பான தனது முடிவை அவர் அறிவித்துள்ளார்.




# நெய்மர் விளையாடுவதில் சந்தேகம்




காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக ரியல் மாட்ரிட் அணிக்கு எதிரான சம்பியன்ஸ்லீக்ஆட்டத்தில்நெய்மர்விளையாட மாட்டர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மார்செய்ல் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாரிஸ் செய்ண்ட் ஜெர்மெய்ன் எப்.சி. அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின்போது பிரேஸில் உதைபந்து அணி மற்றும் பரிஸ் செய்ண்ட் ஜெர்மெய்ன் அணியின் முன்னணி வீரரான நெய்மரின் காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் பாதியிலேயே ஆட்டத்தில் இருந்து வெளியேறினார். இந்த நிலையில், சாம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரின் இரண்டாவது சுற்று போட்டியில் தசையில் பிடிப்பு ஏற்பட்டுள்ளதுடன், பாத எலும்புகள் ஒன்றில் முறிவு ஏற்பட்டுள்ளது இதனால் நெய்மர் விளையாட மாட்டார் எனப் பாரிஸ் செய்ண்ட் ஜெர்மெய்ன் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது. (ப)

# பெடரருக்கு இரட்டை விருது

ஒவ்வொரு ஆண்டிலும் அதே ஆண்டு முழுவதும் விளையாட்டு உலகில் ஆதிக்கம் செலுத்தி சாதனை படைக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு லாரெஸ் உலக விளையாட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா மொனாக்கோவில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. இதில் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை டெனிஸ் வீரர் சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் தட்டிச்




சென்றார். அத்துடன் கால் முட்டியில் காயம், ஆட்டத்தில் தொய்வு என்று சரிவை சந்தித்து வந்த அவர் மறுபடியும் எழுச்சி பெற்று டெனிஸ் உலகைக் கலக்கி வருவதற்கும் ஒரு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

இந்த இரட்டை விருதுகளையும் சேர்த்து பெடரர் இதுவரை 6 லாரெஸ் விருதுகளையும் சொந்தமாக்கியுள்ளார். (ப)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேரவையூடாகப் போதிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சரும்தமிழ்மக்கள்பேரவையின் இணைத் தலைவருமான சி.வீ. விக்கினேஸ்வரன்.

யாழ். பொது நூலகத்தில் நடந்த பேரவையின் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

எமது இளைஞர்களை ஒன்று சேர்க்கும் ஒரு பாரிய பொறுப்பு எம்மேல் சுமத்தப் பட்டுள்ளது. படித்த, பட்டம் பெற்ற, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருக்கும் இளைஞர் – யுவதிகளும், படிப்பை இடைநிறுத்தி வேலைகளுக்காக அலைந்து திரியும் இளைஞர் – யுவதிகளும், விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் இளைஞர் – யுவதிகளும், இன்னும் பல இள நெஞ்சங்களும் உங்கள் தமிழ் மக்கள் பேரவைக்கு எப்போப்பட்ட ஆதரவை நாம் வழங்கலாம் என்று கேட்டு வருகின்றார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் என்னை வட மாகாண சபையில் இருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுத்தபோது வந்து என்னைச் சந்தித்து தமது ஆதரவை நல்கிய பெரும்பான்மையான இளைஞர் குழாம்கள் எம்மோடு இணைந்து பயணிக்க நாட்டம் கொண்டுள்ளனர். அவர்களை ஒன்றிணைக்க எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. எனினும், தொடர்ந்து அவர்கள் தமது கருத்துக்களை எனக்கு வெளிப்படுத்தி வருகின்றார்கள் – என்றார். (ஐ)

## சிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2009 இல் முள்ளிவாய்க்கால் 2018 இல் சிரியாவா? எனக் கேள்வியெழுப்பிய போராட்டக்காரர்கள், ஈழ தேசத்தில் 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையே 2018 இல் சிரிய மக்கள் கொல்லப்படுவதையாவது உடனடியாக நிறுத்து எனக் கோரிக்கை விடுத்தனர்.

சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்படுவதற்கு உலக நாடுகள் பலவும் எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நண்பகல் வரை நடைபெற்றது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் இனப்படுகொலையை நிறுத்து, நாங்கள் போரின் வலிகளை அறிந்தோர், மௌனமும் ஒரு யுத்தக் குற்றத்தை நியாயப்படுத்துவதற்குச் சமன், அப்பாவி மக்கள் மீதான படுகொலையை உடன் நிறுத்து, 2009 முள்ளிவாய்க்கால் 2018 சிரியா போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு கோஷங்களையும் எழுப்பினர். (ஐ -7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒருவருமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசும்போதே முதலமைச்சர் மேற்படி விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்குப் பின்னர் முதல் தடவையாக நாங்கள் கூடியுள்ளோம். இந்தத் தேர்தல் தொடர்பாக பல விடயங்களைப் பேசியிருந்தோம். இதுவரை காலமும் தமிழ்த் தலைமைகள் கூறி வந்திருந்த கருத்துக்களில் தேர்தலின் பின்னர் எவ்வாறான மாற்றங்கள், வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன என்பன தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தோம்.

தமிழ் மக்கள் பேரவையானது மக்கள் இயக்கமாகவே இருக்க வேண்டும் என்பதுடன் கட்சி ரீதியாக எந்தவிதத்திலும் செல்வதில்லை என்பது தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடினோம்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் பேரவை ஒரு யாப்பைக் கொண்டிருக்காத நிலையில் அதற்கான ஒரு யாப்பை – கட்டுமானத்தை உருவாக்குவதற்காகப் 11 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளோம். இந்தக் குழு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அத்துடன் மக்களுக்கு அரசியல் தொடர்பான விளக்கங்களைக் கொடுப்பதற்காகத் திருகோணமலையில் அடுத்த கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது. இளைஞர் அணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டிருந்தது. – என்றார்.

இதேவேளை, தற்போது இடம்பெற்று வரும் ஜெனிவாக் கூட்டத் தொடர் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டபோது, அங்கு தமிழ் மக்கள் பேரவையில் இருந்து சிலர் செல்லவுள்ளனர் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-7)

## சைவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சபையால் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத் தப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஆதீன முதல்வர்கள், துறவிகள் முன்னிலை வகிக்க சைவ ஆலயங்களின் பரிபாலன சபைகள், தர்மகத்தா சபைகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளவுள்ள இந்தப் போராட்டத்தின் முடிவில் வடமாகாண முதலமைச்சருக்கு மகஜர்கையளிக்கப்படும்.

மேலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு வட மாகாண ஆளுநர் ஊடாகவும் இந்து கலாசாரத் திணைக்களப் பிரதிநிதி ஊடாக இந்து கலாசார அமைச்சருக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

தாய் மதத்தை, மனிதத்தை மதிக்கும்சகலரும் இதில் கலந்து கொள்ளுங்கள் எனச் சைவ மகாசபைகோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## முக்கியமானதொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் பணியகத்துக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் நியமனக் கடிதங்களை வழங்கியிருந்தார்.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தமது கீச்சகப் பக்கத்தில் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், வலுவான, சுதந்திரமான, காணாமற்போனோருக்கான பணியகத்தின் உருவாக்கமானது, இலங்கையின் அனைத்து மக்களுக்கும், குறிப்பாக தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான பதிலைத் தேடுகின்ற மக்களுக்கு, நிலையான அமைதி, மீளநிகழாமை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கு ஒரு முக்கியமான நகர்வாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காணாமற்போனோர் பணியகத்தின் ஏழு உறுப்பினர்களின் நியமனங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கீகாரம் அளித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், காணாமற்போனோர் பணியகத்தின் தலைவராகச் செயற்படுவார் என்றும், ஏனைய ஆறு உறுப்பினர்களும் அவருடன் இணைந்துபணியாற்றுவார்கள் என்றும் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகத்தின் ஏனைய உறுப்பினர்களாக, ஜெயதீபா புண்ணியமூர்த்தி, மேஜர் ஜெனரல் மொஹந்தி அன்ரோனெட் பீரிஸ், கலாநிதி சிறியானி நிமல்கா பெர்னாண்டோ, மிராக் ரகீம், சுமணசிறி லியனகே, கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், கருத்து வெளியிடுகையில், பணியகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அடுத்த வாரம் சந்தித்து, எவ்வாறு பணியகத்தை ஒழுங்கமைப்பது என்பது, எதிர்கால நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாக ஆராயவுள்ளனர் என்று கூறினார்.

இதனிடையே, காணாமற்போனோர் பணியகத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ஏழு பேரில், இலங்கை இராணுவத்தின் சட்டப் பிரிவுப் பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் மொஹந்தி பீரிஸும் ஒருவராவார். இவரது கணவர் மேஜர் ஜெனரல் பசில் பீரிஸ் சிறிலங்கா இராணுவத்தின் வரவு – செலவுத் திட்ட மற்றும் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)

## வழிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது அதில் இணைத்தலைவர் என்ற முறையில் உரையாற்றுகையிலேயே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

முதல்வரின் முழு உரையும் 9 ஆம் பக்கத்தில் விவரமாகப் பிரசுரமாகியுள்ளது. (உ)

# பொலிஸ் ஆணைக்குழுவை மாற்றியமைக்கவுள்ள ரணில்



கொழும்பு, மார்ச். 02

தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுவுக்குப் புதிய அதிகாரிகளை நியமித்து அதனை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைக்கப் பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளார் என அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் சட்டம் ஒழுங்கு அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இந்தப் பேச்சைத் தொடர்ந்து தேசிய பொலிஸ் ஆணைக் குழுவைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ஐ)

## அனந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆகியோர் தமிழ் மக்கள் பேரவையின் மத்திய குழுவில் இணைக்கப்பட் டுள்ளனர்.

தமிழ் மக்கள் பேரவையின் விசேட பொதுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் மட்டுமே வருகை தந்திருந்தார். முன்னாள் அதிபரும் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளருமான க.அருந்தவபாலன், வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

இதன்போது அங்கு இணைத்தலைவர் உரையாற்றியவடக்குமாகாணமுதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், சபை ஏற்றுக்கொண்டால் இந்த மூவரையும் மத்திய குழுவில் இணைத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். இதனையடுத்து குழு உறுப்பினர்களின் சம்மதத்துடன் மூவரும் மத்திய குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

ஐங்கரநேசனுக்கு எதிராக தமிழரசுக் கட்சியினால் ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு அவர் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இதேவேளை, கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோர் அந்தக் கட்சியுடன் இணைந்து பணியாற்றியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## மனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) றுடன் ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டுபேசியுள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இதன்போது, பொது மக்கள் மனம்தளராமல்தமதுஉரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனச் சம்பந்தன் தெரிவித்துள்ளார் எனக் கேப்பாபிலவுப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் தெரிவித்தார்.

கேப்பாபிலவுக் காணிகளை விடுவிப்பதற்குரிய அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் நல்லதொரு முடிவை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்போம் எனவும் சம்பந்தன் தெரிவித்தார் என அந்தப் பெண் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்பதற்கான புதிய ஆதாரங்களை அல் ஜஸீரா சர்வதேச ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாக்குமூலங்களுடன் அந்த ஊடகம் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்துவிட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட என்ற குற்றச்சாட்டையுடைய அரசை அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சர்வதிகாரமற்ற ஆட்சியை முன்னெடுப்பேன் என மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். எனினும் தமிழர்களுக்கு எதிரான சித்திரவதைகள் தற்போதும் தொடர்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் அல் ஜஸீராவுக்குக் கிடைத்துள்ளன.

இலண்டனிலுள்ள அல் ஜஸீராவின் பிரத்தியேக நிருபர் பரனாபெ பிலிப்ஸ் இந்த ஆதாரங்களைச் சேகரித்துள்ளார் – என்றுள்ளது.

இதேபோன்ற ஆதாரங்களை ஏ.எப்.பி. சர்வதேச ஊடகம் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது. அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடம் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களே இவையாகும். (ஐ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் நடந்த அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசின் மூன்று ஆண்டுகால ஆட்சியில் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்றுக்கொண்டு இணை அனுசரணை வழங்கிய பிரேரணையின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

சமாதானம் – நல்லிணக்கம் – பொறுப்புக்கூறல் – அரசியல் தீர்வு உள்ளிட்ட பல உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல், இழுத்தடிக்கப்படுவது, பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. – என்றார். (ஐ)

### தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக

# 100 கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்பு!

கொழும்பு, மார்ச் 02

தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரிகளை வலுவூட்டும் இணைந்த 100 கடன் முன்மொழிவுத்திட்டங்களை உள்ளடக்கிய விரிவான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை இன்னும் சில மாதங்களில் நடைமுறைப் படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

அரச வங்கிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

தேசிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்களை வலுவூட்டி நாட்டின் தேசிய கைத்தொழில் துறையில் புத்தெழுச்சியை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இன்னும் சில மாதங்களில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியில் தனக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நிதி அமைச்சிடம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச வங்கிகளினூடாக ஈட்டப்படும் இலாபங்கள் எவ்வளவு தூரம் மக்களைச் சென்றடைகின்றது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.



இந்த நன்மைகள் பொருளாதார செயன்முறையில் சாதாரண மக்களையும் தொழில் முயற்சியாளர்களையும் சென்றடைவதற்கான திட்டங்கள் அவசியமாகும்.

இந்த கடன் முன்மொழிவு முறைமை தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு விரிவான பிரசார நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

பெரும்பாலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள முக்கிய பிரச்சினையாக அமைவது கடன் பெற்றுக்கொள்கின்றபோது விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளும் பிணை ஆவணங்கள் தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளுமாகும்.

கடன் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் பிணைஆவணங்களைகுறைந்த மட்டத்தில் பேணி அசௌகரியங்களின்றி தொழில் முயற்சியாளர்கள் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பின்புலத்தை ஏற்படுத்த வேண்டியது முக்கியமாகும்.

வேலையற்ற பட்டதாரிகளை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் நோக்குடன் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள். அரசியல் பேதங்களின்றி இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் நன்மைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது கிராம சேவகர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அரச வங்கிகள் மக்கள் நட்புடையவையாக இருக்க வேண்டும் என்பதுடன் கடன் பெற்றுக் கொள்வதற்கு அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருகின்ற பொதுமக்களுடன் மிகவும் சுமுகமாக செயற்பட்டு அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது குறித்து பணிக்குழாமினரைத் தெளிவுபடுத்தவேண்டும்.

இலங்கை அரச வங்கிகள் வர்த்தகமயப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் சமூகப் பிரச்சினைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான கடனை வழங்குதல் என்பன சிறந்த அளவில் பேணப்படுவதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரசஈட்டு முதலீட்டு வங்கி உள்ளிட்ட நிதி அமைச்சின் கீழுள்ள அரச வங்கிகளினூடாக தேசிய, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்காக தற்போது நடை முறைப்படுத்தும் கடன் முன் மொழிவு முறைமை தொடர்பாக விவரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, தொழில் முயற்சியாளர்கள் மேற்கொள்கின்ற முன்மொழிவுகளைக் கருத்திற் கொண்டு இக்கடன் முன்மொழிவு முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில், அமைச்சர்களான மங்கள சமரவீர, லக்ஷ்மன் கிரியெல்ல, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரண, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லலித் சமரகோன் ஆகியோரும் அரச வங்கிகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# மக்களின் தீர்ப்பை அடுத்து...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

எமது மத்திய குழு முன்போல காலத்திற்கு காலம் கூடும். ஆனால் எங்களுள் இருந்து ஒரு சிலரை செயற்குழுவுக்கு நியமிக்க உத்தேசித்துள்ளோம். இந்தக் குறைந்த தொகையினர் வேண்டும்போது மாதாமாதம் கூடலாம். மத்திய குழு அங்கத்தவர்கள் வேண்டும் போது தமது அறிவுரைகளை எமக்கு வழங்கலாம்.

ஆனால் இறுதித் தீர்மானங்கள் இந்தச் செயற்குழுவையே சாரும். நிர்வாகத்திறன் கருதியும், குறைந்தோர் கூடிய கெதியில் கூடமுடியும், தீர்மானங்களை எடுக்க முடியும் என்ற காரணத்தாலும், தீர்மானங் களைக் கட்சி அரசியல் சார்ந்து எடுக்காமல் இயக்கத்தின் குறிக்கோள்களை மையமாக வைத்துஎடுக்கவும் இந்தவழிமுறை பலனளிக்கும் என்று எண்ணுகின்றோம்.

கட்சி அரசியல் வேறு, அரசியலில் நாட்டம் வேறு. முடிந்த வரையில் அரசியலில் நாட்டமும் கட்சி அரசியலில் வெகுவாக ஈடுபாதிருப்பவர்களையே செயற்குழுவில் நியமிக்கக் கருதியுள்ளோம். எமது தேர்வு பின்வருவோரை உள்ளடக்கியுள்ளது. எங்களுள் 11 பேரை அடையாளங் கண்டுள்ளோம். தேர்தல்களு டனும் கட்சி அரசியலுடனும் வெகுவாக இணைந்த எமது சகோதர சகோதரிகளை நாம் செயற்குழுவிற்குள் சேர்க்கவில்லை.

**பின்வருவோர் அடையாளப் படுத்தப்பட்டுள்ளார்கள்.**

1. வைத்திய கலாநிதி லக்ஷ்மன்.
2. வைத்திய கலாநிதி சிவன் சுதன்.
3. பேராசிரியர் சிற்றம்பலம்.
4. பேராசிரியர் சிவநாதன்.
5. ஜனாதிபதி சட்டத்தரணி புவிதரன்.
6. கல்லூரி அதிபரும் ஊடக விலளாளருமான விஜய சுந்தரம்.
7. வணக்கத்திற்குரிய ஜெயபாலன் குரூஸ்.
8. ஜனார்த்தனன் .
9. வசந்தராஜா
10.வைத்திய கலாநிதி கருணாகரன் இவர்களுடன் நானும் சேர்ந்து கொள்வேன். எல்லாமாகப் பதி னொருபேர்.

எங்கள் ஏற்பாட்டை எமது மத்திய குழு ஏற்றால் செயற் குழுவை இன்றே நியமித்து வேலைகளைத் தொடங்கலாம். எமது முதல் வேலையாக 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு திருகோணமலையில் பொதுமக்களுக்கு அரசியல் ஞானம் புகட்டும் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தவுள்ளோம். ஏற்கனவே பேச்சாளர்களை அடையாளப் படுத்தியுள்ளோம். யோதிலிங்கம் அவர்கள் இணைப்பாட்சி பற்றியும், சிரேஷ்ட விரவுரையாளர் கே.ரி கணேசலிங்கம் வடகிழக்கு இணைப்பு பற்றியும், சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ் இரத்னவேல் ஐக்கியநாடுகள் சபையில் இலங்கை பற்றிய பிரேரணை பற்றியும் பேச இருக்கின்றார்கள். எமது மக்களை ஒன்றிணைத்து அந்தக் கூட்டத்திற்கு கொண்டுவர நீங்கள் ஒவ்வொருவரும் உதவவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் கூட்டத்திற்கு வருவீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

> பேரவைக்கு நிர்வாக ஒழுங்கமைப்பு உண்டு ஆனால் கட்சி எதிர்பார்ப்புக்கள் இல்லை

தமிழ்மக்கள்பேரவைதொடர்ந்து எம் மக்களின் விமோசனத்தில் கரிசனை காட்ட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் ஒவ் வொருவரும் தாங்கள் மக்கள் சேவையில் எவ்வளவு தூரம் இறங்க முடியும் என்று எமக்குத் தெரியப்படுத்தினால் நல்லது. உதாரணமாக எமது வைத்தியர்கள் ஒரு நாள் இலவச வைத்திய முகாம் ஒன்றை நடத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

நாங்கள் வெறுமனே அரசியல் பேசுவதால் மக்களுக்கு நன்மை ஏற்படாது. அரசியல் ஞானமும் பொருளாதார நன்மைகளையும் அவர்கள் பெறவேண்டும். இதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் பாடுபடுவோமாக என்று கூறி எனது இணைத்தலைவர் உரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். (இ

# தமிழால் எழுதுவோரை செம்மையாக்கும் இலக்கண, இலக்கிய கலந்துரையாடல்



கொழும்பு, மார்ச் 02

சமூக வலைத்தளங்களில் தமிழால் எழுதுவோரை செம்மையாக்கும் இலக்கண, இலக்கிய ஆய்வுத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

அஸ்திரம் நற்பணி மன்றத்தின் வவுனியா காரியாலயத்தில் கவிஞர் வே.தீபன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, வாசிப்பு திறனை மேம்படுத்தும் வகையில் ஒரு தொகை புத்தகங்கள் கவிஞர் தீபனால் வழங்கப்பட்டன.

மேலும், இந்த நிகழ்வில், அஸ்திரம் இளைஞர் கழக தலைவர் நா.ஸ்ரீதரன், யுரேனஸ் இளைஞர் கழக தலைவர் சிம்சுமன், வெளி சஞ்சிகை இதழாசிரியர் ந.அருளானந்தம், அஸ்திரம் மக்கள் நற்பணி மன்ற செயலாளர் ந.கிருஷ்ணமூர்த்தி, பசுமை புரட்சி அமைப்பின் ஸ்தாபகர் ந.விநோதன், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சி.கபிலன், நேர்மையின் புகலிடம் அமைப்பின் விநோதினி, பாரதி இளைஞர் கழக தலைவர் கமல் மற்றும் தமிழ் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# அழிவுப் பாதையில் ஐக்கிய தேசியக் கட்சி

## ரவி கருணாநாயக்க சாடல்

கொழும்பு, மார்ச் 02

தேசியப் பட்டியலின் ஊடாக வந்த ஓரிருவர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டு செல்கின்றனர் எனக் கட்சியின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மொதர – கிம்புலாகலவில் விளையாட்டுக் கழகமொன்றுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசியப் பட்டியலின் ஊடாக வந்த ஓரிருவர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டு செல்கின்றனர். இவ்வாறான ஓரிருவரினால் கட்சிக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பின்நகர்த்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நாம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். தற்போது கட்சியை மறுசீரமைக்க நேரம் வந்துள்ளது. ஆகவே, உடனடியாகக் கட்சியை மறுசீரமைக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை மாத்திரமின்றி ஏனைய கட்சிகளையும் மறுசீரமைக்க வேண்டும். ஏனெனில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அத்தனகல்ல தொகுதியைப் பொறுப்பேற்ற போதும் அதில் தோல்வி அடைந்தார்.

மக்கள் ஆணையைப் பெற்ற என் மீது மாரப்பன குழுவின் ஊடாக ஆணை இல்லாதவர்கள் தீர்மானம் எடுக்கின்றனர்.

இந்நிலையில், நான் நிதி அமைச்சராகப் பதவி வகித்தபோது மாணவர்களுக்கான காப்புறுதிகள் மற்றும் ரப் கணினி வழங்குவதற்கான திட்டங்களை நானே ஆரம்பித்தேன். எனினும், இதற்குச் சொந்தம் கொண்டாடுவதற்குப் பலர் முனைகின்றனர் – என்றார். (ஐ)

# மரைன் படைப் பிரிவை பலப்படுத்தும் கடற்படை



கொழும்பு, மார்ச் 2

இலங்கைக் கடற்படையில் அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட மரைன் படைப்பிரிவு வேகமாகப் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

குறுகிய காலத்துக்குள் மரைன் படைப்பிரிவின் மூன்றாவது அணி பயிற்சியை முடித்து வெளியேறியிருக்கிறது.

சம்பூரில் உள்ள மரைன் பற்றாலியனின் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த நிகழ்வில், 16 அதிகாரிகள் மற்றும் 123 மரைன் கொமாண்டோக்கள் பயிற்சிகளை முடித்து வெளியேறினர்.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் நிமல் சரத்சேன இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று மரைன் படையணியின் புதிய கொமாண்டோக்களுக்கான பட்டிகளை அணிவித்தார்.

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், கடற்படையின் மரைன் படைப்பிரிவின் முதலாவது அணி பயிற்சியை முடித்து வெளியேறியது. கடந்த ஒரு ஆண்டு காலப்பகுதியில் மரைன் படைப்பிரிவின் மூன்று அணிகள் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளன. (ஐ)

# ஊழலுக்கு எதிரான கொள்கையில் மாற்றம் எதுவுமேயில்லை – மைத்திரி

கொழும்பு, மார்ச் 02

ஊழல், மோசடிகளுக்கு எதிரான தனது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை – கிரித்தலே பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முறைகேடுகள் இன்றிச் சரியாகவும், வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கத் தேவையான வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் உருவாக்க உள்ளேன் என ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

மேலும் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்குக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக 50 லட்சம் ரூபாவை வழங்க எதிர்பார்த்துள்ளார் என்றும், அந்தப் பணத்தில் ஊழல் செய்யாது சிறப்பாகப் பணியாற்றுவோருக்கு 100 லட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஐ)




## On Line Jobs

பகுதி நேரமாகவும், சுயதொழிலாகவும், பொழுதுபோக்காக வீட்டில் இருந்தவாறே Inter Net மூலமாக பணம் சம்பாதிப்பதற்கு உரிய நான்காவது வகுப்பின் இரண்டாவது குழு நாளை மறுதினம் 04.03.2018 இருந்து நடத்தப்படவுள்ளது. முற்பதிவு செய்பவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். ஒரு வகுப்பில் 10 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். முற்பதிவுகளை SMS மூலம் பெயர், தேசிய அ.அட்டை இலக்கம் என்பவற்றை அனுப்பவும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:-

பிரசன்னா

076 349 4111







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.